தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

20.02.2013 A.M

## தக்காளி கிலோ ரூ.5



கடந்த சில தினங்களாக தக்காளியின் வரத்து அதிகரித்துள்ளதால் விலை வீழ்ச்சியடைந்து கோயம்பேடு மார்க்கெட்டில் ஒரு கிலோ ரூ.5-க்கு விற்கப்படுகிறது.

கடந்த மாதத்தில் அதிகப் பனி காரணமாக தக்காளின் விளைச்சல் குறைவாக இருந்தது. இதையொட்டி கோயம்பேடு மார்க்கெட்டுக்கு வரத்தும் குறைந்ததால் ஒரு கிலோ தக்காளி ரூ.20 முதல் ரூ. 25 வரை விற்கப்பட்டது. தற்போது தக்காளியின் விளைச்சல் அதிகரித்துள்ளதால் கோயம்பேடு மார்க்கெட்டுக்கு தக்காளியின் வரத்தும் அதிகரித்துள்ளது.

இதனால் தக்காளியின் விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்துள்ளது. இது குறித்து வியாபாரி ஒருவர் கூறியது: கடந்த மாதம் கர்நாடகத்தில் இருந்து வரும் நவீன் தக்காளியும், தமிழகத்தில் இருந்து வரும் நாட்டுத் தக்காளியும் ஒரு நாளைக்கு 30 முதல் 40 லாரிகள் வரை வருகின்றன. இதனால் நாட்டுத் தக்காளி ஒரு கிலோ ரூ.5-க்கும், நவீன் தக்காளி ஒரு கிலோ ரூ.7-க்கும் விற்கப்படுகிறது என்றார்.

செவ்வாய்க்கிழமை கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறி விலை நிலவரம் (ஒரு கிலோ): பெரிய வெங்காயம் ரூ.20, சாம்பார் வெங்காயம் ரூ. 35, கத்திரி ரூ.10, கோஸ் ரூ.10, கருணை ரூ.14,

உருளை ரூ.16, பீன்ஸ் ரூ.16, அவரை ரூ.10, கேரட் ரூ.15, நூக்கல் ரூ.10, பீட்ரூட் ரூ.12, பாகல் ரூ.20, இஞ்சி ரூ.40, வெண்டை ரூ.15, மாங்காய் ரூ.20, பெங்களூர் கத்திரி ரூ.10, பச்சை மிளகாய் ரூ.14, காலிஃபிளவர் (ஒரு பூ) ரூ.10 முதல் 25 வரை.

## வேளாண் வளர்ச்சிப் பணிகள்: ஆட்சியர் ஆய்வு

திருவள்ளூர், எல்லாபுரம் ஒன்றியங்களில் நடைபெறும் வேளாண் வளர்ச்சித் திட்டப்பணிகளை ஆட்சியர் கே.வீரராகவராவ் செவ்வாய்க்கிழமை ஆய்வு செய்தார்.

மேலானூர் கிராமத்தில் திருந்திய நெல் சாகுபடி முறையில் 80 ஏக்கரில் ஏ.டி.டி. 43 ரக நெல் பயிரிடப்பட்டுள்ளது.

இது குறித்து விவசாயிகளுடன் கலந்துரையாடிய அவர் அனைத்து பருவத்திலும் 100 சதவீதம் திருந்திய நெல் சாகுபடி பயிர் செய்ய களப்பணியாளர்களுக்கு அறிவுறுத்தினார்.

ஒரு விவசாயிக்கு ரூ.3000 மானியத்துடன் விசை தெளிப்பானை வழங்கினார்.

மேலும் சுதாகர் என்பவரது நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள மண்புழு உரம் தயாரிக்கும் மையத்தையும் அவர் பார்வையிட்டார்.

அதே போல் எல்லாபுரம் ஒன்றியத்தில் குமக்கம்பேடு கிராமத்தில் 13 ஏக்கர் பரப்பில் திருந்திய நெல் சாகுபடி செய்யப்பட்ட நிலத்தை பார்வையிட்டார்.

அதன் பின்னர் தாமரைப்பாக்கத்தில் வேளாண் பொறியியல் துறை மூலம் தண்ணீர் சேமிப்பு திட்டத்தின் கீழ் ரூ.3 லட்சத்தில் கட்டப்பட்ட தடுப்பணையை ஆய்வு செய்தார்.

வடமதுரை கிராமத்தில் 20 ஏக்கர், தண்டலம் கிராமத்தில் 80 ஏக்கர் பரப்பில் செயல்படுத்தப்படும் நெல் சாகுபடியை பார்வையிட்டு நடவு இடைவெளி, வேளாண் தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு விளக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

கிளாம்பாக்கம் கிராமத்தில் நீர்வளநிலவள திட்டத்தின் கீழ் ரூ.6 லட்சத்தில் கட்டப்பட்டுள்ள சேமிப்பு மையம், ரூ.3.1 லட்சத்தில் கட்டப்பட்ட உலர்களப்பணிகளையும் அவர் ஆய்வு செய்தார்.

வேளாண் இணை இயக்குநர் கோ.சீனிவாசலு, துணை இயக்குநர் கே.பாபு, தோட்டக்கலை துணை இயக்குநர் ரஞ்சன்பால், வேளாண்வணிகத்துறை துணை இயக்குநர் லேபாச்சீஸ்வரர்,

வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் ஆதித்தன், உதவி இயக்குநர்கள் எபிநேசன், சாவித்ரி, பிரதாப் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### பிப். 22-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 22-ம் தேதி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறுகிறது.

அன்றைய தினம் காலை 11 மணிக்கு நடைபெறவுள்ள இக்கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் கே.வீரராகவராவ் தலைமை வகிக்கிறார்.

திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த வேளாண்மை, தோட்டக்கலை, வருவாய், மின்வாரியம், கூட்டுறவு, பொதுப்பணித்துறை, வேளாண் பொறியியல், மீன்வளத்துறை, கால்நடை, வேளாண் விற்பனை துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்.

எனவே விவசாயிகள் தவறாமல் கூட்டத்தில் பங்கேற்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொண்டுள்ளார்.

### நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க விவசாயிகள் எதிர்ப்பு

சிவகங்கை மாவட்டத்தில் அரசு சார்பில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டால், தங்கள் பகுதிக்கு அரசின் வறட்சி நிவாரணம் கிடைப்பதில் சிக்கல் ஏற்படும் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

சிவகங்கை மாவட்டத்தில் கடந்தாண்டு அறுவடை காலத்தில் அனைத்து ஒன்றியங்களிலும் 47 அரசு நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டது. வியாபாரிகளைவிட, கொள்முதல் நிலையங்களில் தங்கள் நெல்லுக்கு கூடுதல் விலை கிடைத்ததால் விவசாயிகள் அரசு கொள்முதல் நிலையங்களில் நெல்லை விற்பனை செய்வதில் ஆர்வம் காட்டினர்.

சென்ற ஆண்டு ஆளும் கட்சி பிரமுகர்கள் குறிப்பட்ட இடங்களில் கொள்முதல் நிலையங்கள் அதிகமாக திறக்கப்படும் நிலை இருந்தது. ஆனால், இந்தாண்டு நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. விவசாய தொடக்க காலத்தின்போதும் அதன் பின்னரும் மழை பொய்த்துப் போனதால், கடன் வாங்கி விவசாயம் செய்திருந்த விவசாயிகள் கவலையடைந்தனர்.

தற்போது சிவகங்கை மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் மழையின்றி விவசாயம் பொய்த்துப் போனதால், விவசாயிகள் சாவி அறுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். சாவியான பயிர்களை மாடுகள் மேய்ந்து வருகின்றன. கிணற்றுப் பாசனம் மூலம் விவசாயத்தை காப்பாற்றிய விவசாயிகளுக்கும் முழுமையாக பலன் கிடைக்கவில்லை. கடந்தாண்டில் கிடைத்த நெல் மூடைகளின் அளவைவிட மிகவும் குறைந்த எண்ணிக்கையே கிடைத்தது.

விவசாயப் பணி தொடக்கத்தின்போது மழை ஏமாற்றியதால் பயிர் காப்பீடு செய்வதில் விவசாயிகள் மும்முரம் காட்டினர். இந்த நிலையில், தமிழகம் முழுவதும் 31 மாவட்டங்களையும் தமிழக முதல்வர் ஜெயலலிதா வறட்சி மாவட்டமாக அறிவித்து, இம் மாவட்டங்களை ஆய்வு செய்து அறிக்கை வழங்குமாறும், அதன்பின்னர் விவசாயிகளுக்கு இழப்பீடு அறிவிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். இதனால் இம் மாவட்ட விவசாயிகள் எப்படியும் தங்களுக்கு அரசின் நிவாரணம் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில் உள்ளனர்.

இதற்கிடையே, நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாகம் மூலம் சிவகங்கை மாவட்டத்தில் இந்தாண்டு நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க நடவடிக்கை மேற்கொண்டபோது, விவசாயிகள் தரப்பிலிருந்து இதற்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. கடந்தாண்டு 47 இடங்களில் தொடங்கப்பட்ட அரசு கொள்முதல் நிலையங்கள் தற்போது மேலக்கொன்னக்குளம், முதுவந்திடல், முத்தனேந்தல் என 3 இடங்களில் மட்டுமே தொடங்கப்பட்டுள்ளது. பல இடங்களில் எதிர்ப்பு காரணமாக கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படவில்லை. விவசாயம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அரசு நிவராணம் கிடைக்கும் என்று எதிர்பார்த்துள்ளோம். இந் நிலையில், எங்கள் பகுதியில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டால், வறட்சி கணக்கெடுப்பில் விளைச்சல் உள்ள பகுதி என கணக்கெடுக்கப்பட்டுவிடும். இதனால் விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் கிடைப்பதில் சிக்கல் உருவாகும். மேலும், கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டாமல் அதன்மூலம் தனியார் நெல் வியாபாரிகளுக்கு அதிக லாபம் கிடைக்கும். இவர்கள் வியாபாரிகளிடமிருந்து குறைந்த விலைக்கு நெல்லை வாங்கி கொள்முதல் நிலையங்களில் நெல்லை அதிக விலைக்கு விற்பனை செய்வர். அதனால்தான் கொள்முதல் நிலையங்களை திறக்க எதிர்ப்புத் தெரிவிக்கிறோம் என கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால், ஆளுங் கட்சியினர் கொள்முதல் நிலையங்கள் திறக்க ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனராம். பொதுமக்களின் எதிர்ப்பால், திறக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. திறக்கப்பட்டுள்ள மேற்கண்ட 3 கொள்முதல் நிலையங்கள் செயல்படக் கூட கிராம மக்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதால், அவற்றையும் மூடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதாம்.

## ராமேசுவரத்தில் பலத்த மழை

ராமேசுவரத்தில் செவ்வாய்க்கிழமை அதிகாலை பெய்த பலத்த மழை காரணமாக அருள்மிகு ராமநாத சுவாமி கோவில் மூன்றாம் பிரகாரம் உள்பட பல்வேறு இடங்களில் மழை நீர் தேங்கி குளம்போல காணப்பட்டது.

அரபிக்கடலில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் மழை பெய்து வருகிறது. ராமநாதபுரம், ராமேசுவரம், மண்டபம், பரமக்குடி உள்ளிட்ட பகுதிகளில் செவ்வாய்க்கிழமை அதிகாலையில் கனமானது முதல் மிதமான மழை பெய்தது.

நீர் நிலைகளிலும், தாழ்வான பகுதிகளிலும் தண்ணீர் தேங்கி நின்றது. ராமேசுவரம் அருள்மிகு ராமநாத சுவாமி திருக்கோவிலின் மூன்றாம் பிரகாரத்தில் மழை நீர் தேங்கி நின்றது. கோவில் துப்புரவுப் பணியாளர்கள் தேங்கிய மழைநீரை அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள மழையளவு விவரம் (அளவு அடைப்புக் குறிக்குள் மில்லி மீட்டரில்):

ராமநாதபுரம் (18.4), தொண்டி (93.9), தீர்த்தாண்டதானம் (13), முதுகுளத்தூர் (48), பரமக்குடி (10.2), திருவாடானை (4), பள்ளமோர்குளம் (13), வட்டாணம் (5), ஆர்.எஸ்.மங்கலம் (57.2). மற்ற இடங்களில் மழை பெய்ததாகப் பதிவாகவில்லை.

## பெ.நா.பாளையம் வட்டாரத்தில் கனமழை

பெரியநாயக்கன்பாளையம் வட்டாரத்தில் திங்கள்கிழமை நள்ளிரவில் பெய்த பலத்த மழையின் காரணமாக, 100 வயது ஆல மரம் வேரோடு சாய்ந்தது.

பெ.நா.பாளையம், நரசிம்மநாயக்கன்பாளையம், துடியலூர் ஆகிய பகுதிகளில் பலத்த மழை பெய்தது. பன்னிமடையில் கிருஷ்ணசாமி கோவில் முன்பு நின்றிருந்த 100 வயது ஆல மரம் வேரோடு சாய்ந்தது. இங்குள்ள அரசுத் தொடக்க பள்ளி வளாகத்தில் மழைநீர் நிரம்பியதால், பள்ளிக் குழந்தைகள் வகுப்பறைகளுக்குள் செல்ல சிரமப்பட்டனர்.

என்.ஜி.ஜி.ஓ. காலனியில் ரயில் பாதை ஓரத்தில் தாழ்வான பகுதியில் உள்ள கணேஷ் நகர் வீடுகளுக்குள் மழைநீர் புகுந்ததால் பொதுமக்கள் குழந்தைகளுடன் அருகிலுள்ள கோவிலில் தஞ்சமடைந்தனர். காலையிலும் நீர் வடியாததால் ரயில் பாதையின் மேல் அமர்ந்திருந்தனர்.

பெ.நா.பாளையத்தில் தனியார் ஆங்கிலப் பள்ளியின் முன்பிருந்த மின்சார டிரான்ஸ்பார்மர் வெடித்ததால் பாரதி நகர், வித்யாலய குடியிருப்பு, எல்.எம்.டபிள்யூ. பிரிவு ஆகிய பகுதிகளில் இரவு முழுவதும் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. கஸ்தூரிபாளையம் ரோட்டில் உள்ள அரிசன காலனி குட்டைப்பகுதியில் சில வீடுகளில் சாக்கடை நீர் புகுந்ததால் பாதிப்பு ஏற்பட்டது.

கனமழையால் விவசாயிகள் பெரிதும் மகிழ்ச்சியடைந்தனர்.

## உடுமலையில் பலத்த மழை

உடுமலையில் திங்கள்கிழமை இரவு இடி, மின்னலுடன் விடிய, விடிய பலத்த மழை பெய்தது.

உடுமலையில் திங்கள்கிழமை இரவு சுமார் 8 மணி அளவில் திடீரென இடி, மின்னலுடன் பலத்த மழை கொட்டியது. சுமார் ஒரு மணி நேரம் இடிவிடாது பெய்த மழையால் உடுமலை நகரின் முக்கிய வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

மேலும், உடுமலை, மடத்துக்குளம், பெதப்பம்பட்டி பகுதிகளிலும், மலையோரக் கிராமங்களிலும் பலத்த மழை பெய்தது. இரவு விடிய, விடிய மழை பெய்ததால், உடுமலை நகரின் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் புகுந்தது.

உடுமலை கோட்டாட்சியர் வே.லதா, வட்டாட்சியர் எஸ்.சைபுதீன் மற்றும் வருவாய்த் துறையினர் செவ்வாய்க்கிழமை தங்கம்மாள் ஓடை, சாதிக் நகர், யுகேசி. நகர் உள்ளிட்ட தாழ்வான பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டனர்.

## விலையில்லா ஆடுகள், கறவை மாடுகளுக்கு 22, 23-ல் சிறப்பு மருத்துவ முகாம்

விலையில்லா ஆடுகள், கறவை மாடுகளுக்கு இம்மாதம் 22, 23ஆம் தேதிகளில் சிறப்பு கால்நடை மருத்துவ முகாம் நடைபெறுகிறது.

வேலூர் மாவட்டத்தில் 2011-12ஆம் ஆண்டில் 13 கிராம ஊராட்சிகளில் 650 பயனாளிகளுக்கு விலையில்லா கறவை மாடுகளும், 114 கிராம ஊராட்சிகளில் 5,975 பயனாளிகளுக்கு தலா 4 ஆடுகள் வீதம் 23,900 ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன. இதேபோல 2012-13ஆம் ஆண்டில் 12 கிராம ஊராட்சிகளில் 600 பயனாளிகளுக்கு விலையில்லா கறவை மாடுகளும், 133 கிராம ஊராட்சிகளில் 7,994 பயனாளிகளுக்கு தலா 4 ஆடுகள் வீதம் 31976 ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

வேலூர் மாவட்டத்தில் விலையில்லா ஆடுகள், கறவை மாடுகள் வழங்கப்பட்ட ஊராட்சிகளில் இலவச கால்நடை மருத்துவ முகாம் இம்மாதம் 22,23ஆம் தேதிகளில் நடைபெறுகிறது.

இதில் கால்நடைகளுக்கு இலவசமாக செயற்கை கருவூட்டல், குடற்புழு நீக்கம் மற்றும் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

கால்நடை வளர்ப்போர் இம் முகாமில் பங்கேற்று பயனடையலாம் என ஆட்சியர் பொ.சங்கர் தெரிவித்துள்ளார்.

## நடமாடும் சொட்டுநீர் பாசன சேவை ஊர்தி

கரும்பு விவசாயிகளுக்கு நடமாடும் சொட்டுநீர் பாசன சேவை ஊர்தியை ஈஐடி பாரி சர்க்கரை ஆலை அமைத்துள்ளது.

தற்போது நிலவி வரும் கடும் வறட்சி மற்றும் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள மின் பற்றாக்குறையை சமாளிக்கும் வகையில் தற்போது 20 % பேர் சொட்டுநீர் பாசனம் மூலம் கரும்பு சாகுபடி மேற்கொண்டு வருகின்றனர்.

இதனை மேலும் அதிகரிக்கும் வகையில், குரும்பூர் ஈஐடி பாரி சர்க்கரை ஆலை நிர்வாகம் மற்றும் நாகார்ஜினா சொட்டு நீர்பாசன நிறுவனம் இணைந்து நேரடியாக கிராமங்களுக்குச் சென்று நடமாடும் சொட்டு நீர் பாசன சேவை ஊர்தி மூலம் அதற்கான கருவிகள், பயன்படுத்தும் முறை, பராமரிப்பது உள்ளிட்ட செயல் விளக்கம் அளிக்கும் பணி ஞாயிற்றுக்கிழமை தொடங்கப்பட்டது.

ஆலையின் துணைப் பொதுமேலாளர் அ. புண்ணியமூர்த்தி தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் ப்ரித்தி அக்ரோ நிறுவன உரிமையாளர் அருண்மொழிவர்மன், நாகார்ஜினா சொட்டு நீர்பாசன நிறுவன அலுவலர் ரவி, பூமிராஜன், ஆலை அலுவலர்கள் டி. முருகன், எஸ். சேவியர், வி. நாகராஜன், கே. செந்தில்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## மேட்டூர் அணை நீர்மட்டம்: 31.74 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 31.74 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 4,768 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 600 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து கொள்ளிடத்தில் வினாடிக்கு 50 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. காவிரி, வெண்ணாறு, கல்லணைக் கால்வாயில் தண்ணீர் திறக்கப்படவில்லை.

## விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் வட்டார விவசாயிகளுக்கு அட்மா திட்டத்தின் மூலம் மாவட்ட அளவிலான நுண்ணூட்டப் பயிற்சி திங்கள்கிழமை நடைபெற்றது.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஆர். பிரதீபா, வட்டார தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆர். அதிரூபன், என். முத்தழகன், ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ) ஜெ. கதிரவன், மண் அறிவியல் தொழில்நுட்ப வல்லுநர் ஆர். பிரிஸ்கா பிளேவியா, பயிர்ப் பாதுகாப்பு தொழில்நுட்ப வல்லுநர் எஸ். திவ்யர் ஆகியோர் ஒருங்கிணைந்த உர நிர்வாகத்தின் நோக்கம், வழிமுறைகள், பயன்கள், பருத்தி மற்றும் மக்காச்சோளப் பயிருக்கான ஒருங்கிணைந்த உர நிர்வாக முறைகள், நுண்ணூட்டப் பற்றாக்குறை அறிகுறிகள், மண் பரிசோதனையின் அவசியம், செம்மை நெல் சாகுபடி முறைகள், விதை மூலம் சிறிய வெங்காயச் சாகுபடி, பி.டி. பருத்தி மற்றும் மக்காச்சோளத்தில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறை குறித்துப் பயிற்சி அளித்தனர்.

இதில் வேப்பூர் வட்டாரத்தைச் சேர்ந்த 50 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

ஏற்பாடுகளை அறிவியல் மைய வேளாண் விரிவாக்கத் தொழில்நுட்ப வல்லுநர் ஆர். வசந்தகுமார் செய்தார்.

## 3,000 ஏக்கர் நெற்பயிர்கள் நீரில் மூழ்கின திருநெல்வேலி

திருநெல்வேலி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் திங்கள்கிழமை இரவு தொடங்கி செவ்வாய்க்கிழமை வரை பரவலாக மழை பெய்தது. அதிகபட்சமாக மணிமுத்தாறு அணையில் 216.8 மிமீ மழை பதிவானது. அம்பாசமுத்திரம் பகுதியில் 3,000 ஏக்கரில் நெற்பயிர்கள் நீரில் மூழ்கின.

தாமிரவருணி பாசனத்தில் பிசான பருவம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வடகிழக்குப் பருவமழை சரிவர பெய்யாததால் முழுமையாக சாகுபடி செய்யவில்லை. மழை குறைந்ததால் அணைகளில் உள்ள நீர்இருப்பைக் கொண்டு பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது. இப் பாசனத்தில் அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி பகுதிகளில் விவசாயிகள் அம்பை 16, ஆடுதுறை 45, ஜெ.ஜி.எல், பி.பி.டி, ஆந்திரா பொன்னி உள்ளிட்ட ரகங்களைப் பயிரிட்டுள்ளனர்.

பாபநாசம் அணையை அடுத்துள்ள அம்பாசமுத்திரம் வட்டத்தில் வடக்கு, தெற்கு கோடைமேலழகியான் கால்வாய், நதியுன்னி கால்வாய், கன்னடியன் கால்வாய்ப் பாசனத்தில் 18,500 ஏக்கரில் நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

இதேபோல, கடனாநதி, ராமநதி அணைப் பாசனத்தில் கடையம், ஆழ்வார்குறிச்சி பகுதிகளில் சுமார் 10,000 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அவை இன்னும் 15, 20 நாள்களில் அறுவடை செய்யும் பருவத்தில் உள்ளன.

சில நாள்களுக்கு முன்பு பெய்த மழையில் மணிமுத்தாறு அணைப் பாசனத்தில் ஜமீன்சிங்கம்பட்டி, அயன்சிங்கம்பட்டி பகுதிகளில் நெற்பயிர்கள் நீரில் மூழ்கின.

இந்நிலையில், மாவட்டத்தில் திங்கள்கிழமை இரவு மழை பெய்யத் தொடங்கியது. விடியவிடிய பெய்த மழை, சில பகுதிகளில் செவ்வாய்க்கிழமை பகலிலும் நீடித்தது. அதிகபட்சமாக மணிமுத்தாறு அணைப் பகுதியில் 216.8 மி.மீட்டர் மழை பதிவானது. அணைப் பகுதிகளிலும், பிற இடங்களிலும் பதிவான மழையளவு (மில்லி மீட்டரில்):

தென்காசி-114.2, பாபநாசம் அணை-45, கீழ்அணை-96, சேர்வலாறு-10, கடனாநதி-2, ராமாநதி-30, கருப்பாநதி-40, குண்டாறு-12, அடவிநயினார்-6, ஆய்க்குடி-25.2, அம்பாசமுத்திரம்- 71.6, திருநெல்வேலி-9.4, சிவகிரி-25, செங்கோட்டை-15, பாளையங்கோட்டை-4.2, சேரன்மகாதேவி-35, கல்லிடைக்குறிச்சி கன்னடியன் அணைக்கட்டு பகுதி-42.

நீரில் மூழ்கிய நெற்பயிர்கள்: அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, வீரவநல்லூர், பிரம்மதேசம், கௌதமபுரி, சேரன்மகாதேவி, பத்தமடை பகுதிகளில் சுமார் 3,000 ஏக்கரில் அறுவடைக்கு தயார் நிலையிலிருந்த நெற்பயிர்கள் நீரில் மூழ்கி சாய்ந்தன.

தொடர்ந்து மழை நீடித்தால் நெற்பயிரை அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்படும் என விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

நீர்மட்டம்: பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 435.90 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 92 கனஅடியும், கடனாநதி அணைக்கு விநாடிக்கு 100 கனஅடியும், ராமநதி அணைக்கு விநாடிக்கு 140 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

பாபநாசம் அணையில் இருந்து 450 கனஅடியும், மணிமுத்தாறு அணையில் இருந்து பெருங்கால் மதகில் 30 கனஅடியும் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

பாபநாசம் அணை நீர்மட்டம் 46.50 அடியாகவும், சேர்வலாறு அணை நீர்மட்டம் 60.10 அடியாகவும், மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 80.60 அடியாகவும், கடனாநதி அணை நீர்மட்டம் 51.00 அடியாகவும் இருந்தது. ராமநதி அணை நீர்மட்டம் 5 உயர்ந்து 30 அடியாக இருந்தது.

## மேட்டூர் நீர்மட்டம் உயர்கிறது

மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு வினாடிக்கு 4,500 கன அடியாக அதிகரித்துள்ள நிலையில், நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

உச்ச நீதிமன்ற உத்தரவையடுத்து, கர்நாடகத்தின் கே.ஆர்.எஸ். அணையிலிருந்து கடந்த 9ஆம் தேதி வினாடிக்கு 2 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இது 6 நாள்களுக்குப் பிறகு கடந்த 15ஆம் தேதி மேட்டூர் அணைக்கு வந்தது.

கடந்த சில மாதங்களாக நீர்வரத்து இல்லாததால், காவிரி ஆறு வறண்டிருந்தது. இதனால், கர்நாடகம் முதலில் திறந்துவிட்ட தண்ணீர் முழுவதுமாக வந்து சேரவில்லை. இதற்கிடையே, கர்நாடக அரசு நீர் திறப்பை வினாடிக்கு 5 ஆயிரம் கன அடியாக அதிகரித்தது.

இதையடுத்து, கடந்த 17ஆம் தேதி முதல் நீர்வரத்து படிப்படியாக அதிகரிக்கத் தொடங்

கியது.

ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் வினாடிக்கு 1,763 கன அடியாக இருந்த நீர்வரத்து, திங்கள்கிழமை 3,418 கன அடியாக அதிகரித்தது. இது செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் வினாடிக்கு 4,536 கன அடியாக

உயர்ந்தது.

இதனால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் 31.46 அடியாக உயர்ந்தது. மேலும், அணையின் நீர் இருப்பும் 8.11 டி.எம்.சியாக அதிகரித்துள்ளது. அணையிலிருந்து வினாடிக்கு 600 கன அடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

## தென் தமிழகத்தில் பலத்த மழைக்கு வாய்ப்பு



குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக தென் தமிழகத்தில் புதன்கிழமை மழையோ அல்லது இடியுடன் கூடிய பலத்த மழையோ பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

வட தமிழகம் மற்றும் புதுச்சேரியின் சில இடங்களில் மழை பெய்யலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அரபிக் கடலில் லட்சத்தீவுகளுக்கும் கர்நாடகக் கடல் பகுதிக்கும் இடையே நிலை கொண்டுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை, தற்போது வலுவிழந்து வருகிறது.

காற்றழுத்தத் தாழ்வு நிலையின் பரப்பு குறைந்து வந்தாலும் தமிழகத்தில் சில நாள்களுக்கு மழை நீடிக்கலாம் எனக் கூறப்படுகிறது.

தாழ்வு நிலை காரணமாக செவ்வாய்க்கிழமை தமிழகம் மற்றும் கேரளத்தில் பரவலாக மழை பெய்தது.

மாநிலத்தில் அதிகபட்சமாக திருநெல்வேலி மாவட்டம் மணிமுத்தாறில் 220 மில்லி மீட்டர் மழை பதிவானது.

வானிலை முன்னறிவிப்பு: திண்டுக்கல், தேனி, மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் புதன்கிழமை மழையோ அல்லது இடியுடன் கூடிய பலத்த மழையோ பெய்ய வாய்ப்புள்ளது. வடதமிழகம் மற்றும் புதுச்சேரியில் பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மழை பெய்வதற்கான வாய்ப்புகள் குறைவு.

செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிவரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்):

திருநெல்வேலி மாவட்டம் மணிமுத்தாறு - 220, உடுமலைப்பேட்டை - 120, தென்காசி, கோவை மாவட்டம் பெரியநாயக்கன்பாளையம், குளச்சல், தேனி - 110, கோவை - 100, ராமநாதபுரம் மாவட்டம் தொண்டி, கோவை மாவட்டம் அன்னூர் - 80, கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறை, அம்பாசமுத்திரம் - 70, மேட்டுப்பாளையம், கோபிசெட்டிபாளையம், ராமநாதபுரம் ஆர்.எஸ்.மங்கலம் - 60, காஞ்சிபுரம் மாவட்டம் கேளம்பாக்கம், பொள்ளாச்சி, சூலூர், முதுகுளத்தூர் - 50, திருப்பூர், அவினாசி, தருமபுரி மாவட்டம் பாலகோடு - 40.

இன்றைய வேளாண் செய்திகள்

20.02.2013 A.M

## நீர்பாசன பைப்லைன் அமைக்கவேளாண்மைதுறை கடன் வசதி

குஜிலியம்பாறை,:நடப்பு ஆண்டில், போதிய பருவ மழை இல்லாததால், நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்துள்ளது. இந்நிலையில், நீர் விரயத்தை குறைத்து, மகசூலை அதிகரிக்க செய்யும் வகையில், விவசாயிகளுக்கு மானியத்துடன் கூடிய பைப்லைன் அமைக்க அரசு நிதி ஒதுக்கியுள்ளது. இத்திட்டத்தின்படி, ஒரு ஹெக்டேருக்கு ரூபாய் 15 ஆயிரம் மான்யம் வழங்கப்பட உள்ளது.பயனடைய விரும்பும் விவசாயிகள், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில், குழாய் அமைத்து, விலை புள்ளிகளை பெறவேண்டும். மேலும், தங்கள் விண்ணப்பங்களுடன் நிலத்தின் பயிர் மற்றும் புகைப்பட ஆதாரம், நில ஆவணங்களுடன் வேளாண் அலுவலகத்தை தொடர்பு கொள்ளுமாறு, வேளாண்மை உதவி இயக்குநர் ரவிபாரதி தெரிவித்துள்ளார்..

## பலத்த மழையால் அறுவடைக்கு தயாரான நெற்பயிர்கள் சேதம்

தேவதானப்பட்டி:ஜெயமங்கலம் பகுதியில், நேற்று முன்தினம் இரவில் திடீரென பெய்த பலத்த மழையால் அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர்கள் தரையில் சாய்ந்தன. இதனால் விவசாயிகள் கவலையில் உள்ளனர். ஜெயமங்கலம் வேட்டுவன் குளம் கண்மாய்க்கு, வராகநதியில் வரும் நீரை மேல்மங்கலம் முத்தையா கோயில் அருகில் தடுப்பணை கட்டி, அங்கிருந்து தனி வாய்க்காலில் நீர் கொண்டு வந்து நிரப்பப்படுகிறது.

கண்மாயில் தேங்கும் நீரை ஆதாரமாக கொண்டு ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. நடப்பு ஆண்டில் போதிய மழை இல்லாததால், ஒருமுறை கண்மாய் நிறைந்தது. இதனால் நெல்நடவு செய்வதை பெரும்பாலான விவசாயிகள் தவிர்த்தனர். 400 ஏக்கரில் மட்டும் நெல்நடவு செய்யப்பட்டது. 100 ஏக்கர் தரிசாக உள்ளது. கண்மாயில் நீர் வற்றியதால் 200 ஏக்கரில் நெல் வயல்கள் காய்ந்தன. கிணற்று நீரை ஆதாரமாகக் கொண்ட 200 ஏக்கரில் விவசாயிகள் சிரமப்பட்டு நெற்பயிரை காப்பாற்றி வந்தனர்.

அறுவடைக்கு தயாரான நிலையில், கூலியாட்கள் கிடைக்கவில்லை.

இயந்திரம் மூலம் அறுவடை செய்யலாம், என்று விவசாயிகள் நினைத்திருந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு, திடீரென பலத்த காற்றுடன் மழை பெய்தது. இதனால் 100 ஏக்கரில் நெல் வயல்கள் தரையில் சாய்ந்தன.ஜெயமங்கலம் விவசாயி ராமகிருஷ்ணன் கூறியதாவது: நெல்வயல்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவற்கு நாள்தோறும் கண்ணீர் வடித்தோம். ஒரு ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. அறுவடைக்கு தயாராக இருந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு பெய்த மழைக்கு நெற்கதிர்கள் தரையில் சாய்ந்துள்ளன. இதனால் பலத்த பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது,என்றார்.

### பெரியகுளத்தில் 105 மி.மீ., மழை

பெரியகுளம்:பெரியகுளத்தில் கடந்த சில தினங்களாக வெயிலின் தாக்கம் அதிகமாகி இருந்தது.நேற்று முன்தினம் இரவு 9 மணிக்கு இடியுடன் மழை பெய்யத்துவங்கியது. நேற்று காலை 6 மணி வரையிலும் ( 9 மணி நேரம்) மழை கொட்டியது. மழையளவு 105 மி.மீ., இதனால் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். தாசில்தார் அலுவலகத்தில் மழை சேத விபரங்களை அலுவலர்கள் சேகரித்து வருகின்றனர்.

### உர விற்பனையாளர்கள் அடையாள எண்களை பெறவேண்டும்

சிவகங்கை:""உர விற்பனையாளர்கள் அடையாள எண்களை பெறாவிட்டால், "லைசென்ஸ்' ரத்து செய்யப்படும்," என, விவசாயத்துறை இணை இயக்குனர் செல்லத்துரை தெரிவித்தார். அவர் கூறியதாவது: விவசாயிகளுக்கு உரம் விற்பனை செய்யும் நிறுவனங்கள், அதற்கான அடையாள எண்களை பெறவேண்டும்.

### சிறு தானியங்களை பாதிப்பின்றி100 ஆண்டுகள் வரை சேமிக்கலாம்

விருதுநகர்:""சிறு, குறு தானியங்களை, எவ்விதி பாதிப்பின்றி,100 ஆண்டுகள் சேமித்து வைக்க முடியும்," என, கலெக்டர் ஹரிஹரன் கூறினார். சூலக்கரை கம்மவார் அரங்கில், தீவிர சிறு தானிய சாகுபடி மூலமாக நடந்த ஊட்டசத்து கருத்தரங்கை துவக்கி வைத்த அவர் பேசுகையில், ""குறு தானிய பயிர்களான குதிரைவாலி, வரகு, தினை, சாமை வறட்சியினை தாங்கி வளரக்கூடியது. மண் வளம் குறைந்த இடங்களில் கூட அதிக விளைச்சல் தரும். விருதுநகர் மாவட்டத்தில் 1500 எக்டேர் பரப்பளவில், மானாவாரி பயிர்களாக சாகுபடி செய்யப்படுகிறது. குறைவான

மகசூலையே விவசாயிகள் பெற்று வருகின்றனர்.

தற்போது குறு தானிய பயிர்களில் உள்ள சத்துக்கள் குறித்து, மக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டு வருகிறது. இப் பயிர்கள் சாகுபடி தொழில் நுட்பம், மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் குறித்து, விவசாயிகள், தொழில் நுட்ப உதவியாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது. குறு தானியங்கள் முறையாக பாதுகாத்து வைக்கப்பட்டால், 100 ஆண்டுகளுக்கு பாதிப்பில்லாமல் இருக்கும். குறு தானிய சாகுபடி, தொழில் நுட்பம், செயல்முறை விளக்கம், சந்தைப்படுத்துதல் குறித்து பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன," என்றார்.
வேளாண் இணை இயக்குனர் சுப்பையா, துணை இயக்குனர் வன்னியராஜன், அருப்புக்கோட்டை வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் பால்பாண்டியன், மண்டல ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் ஜூலியட் ஹெப்சிபா, உதவி பேராசிரியர் தினரகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## நெல்லை மாவட்டத்தில் தொடர் மழை அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு

திருநெல்வேலி : நெல்லை மாவட்டத்தில் தொடர் மழை பெய்வதால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது. நெல்லை மாவட்டத்தில் போதுமான மழை பெய்யாத சூழ்நிலையில் மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவி வருகிறது. குளங்கள் வறண்டு காணப்படுவதால் விவசாய பணிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.
இந்நிலையில் மாவட்டத்தில் ஒரு சில நாட்களாக பரவலாக ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. அணைகளின் நீர்பிடிப்பு பகுதிகளில் தொடர் மழை பெய்வதால் நீர்மட்டமும் அதிகரித்துள்ளது. நேற்றைய நிலவரப்படி பாபநாசம் அணையில் 46.50 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 435.90 மி.க.அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. 411.25 மி.க.அடி நீர் வெளியேற்றப்படுகிறது. சேர்வலாறு அணையில் 60.10 அடி, மணிமுத்தாறு அணையில் 80.60 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு வினாடிக்கு வரும் 92 மி.க.அடி நீரில் 30 மி.க.அடி நீர் வெளியேற்றப்படுகிறது. கடனா அணையில் 50.40 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு வினாடிக்கு வரும் 30 மி.க.அடி நீர் அப்படியே வெளியேற்றப்படுகிறது. ராமநதி அணையில் 30 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 37.45 மி.க.அடி நீர் வருகிறது. இதில் 15 மி.க.அடி நீர் வெளியேற்றப்படுகிறது. கருப்பாநதி அணையில் 27.23 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு வினாடிக்கு வரும் 21 மி.க.அடி நீரில் 5 மி.க.அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

குண்டாறு அணையில் 21.30 அடி, நம்பியாற்றில் 13.12, கொடுமுடியாற்றில் 2.50 அடி நீர்மட்டம் காணப்படுகிறது. அடவிநயினார் அணையில் 16.50 அடி நீர் மட்டம் உள்ளது. அணைக்கு வினாடிக்கு வரும் 5 மி.க.அடி நீரும் அப்படியே வெளியேற்றப்படுகிறது. அணைப் பகுதிகளில் மழை: >மாவட்டத்தில் நேற்று காலை வரை நிலவரப்படி பாபநாசத்தில் 96, சேர்வலாறில் 10, மணிமுத்தாறில் 216.8, கடனா அணையில் 2, ராமநதியில் 30, கருப்பாநதியில் 42, குண்டாறில் 12, அடவிநயினாரில் 6 மி.மீ அளவுகளில் மழை பெய்துள்ளது. தென்காசியில் அதிகம்: >மாவட்டத்தில் மற்ற பகுதிகளை பொறுத்தவரை அம்பையில் 71.6, வீ.கே புதூரில் 10, ஆய்குடியில் 25.2, நெல்லையில் 9.4, பாளையில் 4.2, சேரன்மகாதேவியில் 35, செங்கோட்டையில் 15, சிவகிரியில் 25, தென்காசியில் 114.2 மி.மீ அளவுகளில் மழை பதிவாகியுள்ளது. தொடரும் மழை: >மாவட்டத்தில் நேற்றும் பல்வேறு பகுதிகளில் வானம் மப்பும், மந்தாரமுமாக கரு மேக கூட்டங்களுடன் காணப்பட்டு ஆங்காங்கே மழை பெய்த வண்ணம் உள்ளது. நெல்லை, பாளை மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் நேற்று மதியம் வரை விட்டு, விட்டு மழை பெய்தது. தொடர்ந்து இதமான சீதோஷ்ண நிலை நிலவி வருகிறது. நேற்று இரவிலும் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் மழை பெய்தது.இந்த மழையால் குடிநீர் பிரச்னை, விவசாய பணிகளை ஓரளவுக்கு சமாளிக்க முடியும் என்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் "குஷி' அடைந்துள்ளனர். நேற்றைய நிலவரப்படி மாவட்டத்தில் ஒரு சில நாட்கள் மழை நீடிக்க அதிக வாய்ப்புகள் உள்ளன.

### சிவந்திப்பட்டியில் பயிர் பாதுகாப்பு செயல் விளக்கம்

திருநெல்வேலி : அட்மா திட்டத்தின் கீழ் பயிர் பாதுகாப்பு செயல் விளக்கம் சிவந்திப்பட்டியில் நடந்தது. பாளை வேளாண்மை உதவி இயக்குனர் மகாலிங்கம் ஆலோசனையின்படி நடந்த இந்நிகழ்ச்சியில் வட்டார தொழில் நுட்ப மேலாளர் பிரதீப் தேவதாஸ் பங்கேற்று ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளான சூரிய ஒளியில் செயல்படும் விளக்கு பொறி, இன கவர்ச்சி பொறி, டிரைக்கோகிரம்மா முட்டை ஒட்டுண்ணி ஆகியவற்றின் பாதுகாப்பு அம்சங்கள் குறித்து விளக்கினார். ஏற்பாடுகளை அட்மா திட்ட வட்டார தொழில் நுட்ப வல்லுனர்கள் ராஜாமணி, நம்பி செய்திருந்தனர்.

### மழையில் நெற்பயிர்கள் சேதம் நிவாரணம் வழங்க கோரிக்கை

ஆழ்வார்குறிச்சி : ஆழ்வார்குறிச்சி மற்றும் ஆம்பூர் பகுதியில் மழையால் பாதிக்கப்படவுள்ள விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என விவசாய சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். ஆழ்வார்குறிச்சி மற்றும் ஆம்பூர் பகுதிகளில் பிசான பருவத்தில் சுமார் 2 ஆயிரம்

ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயிகள் பயிர் செய்துள்ளனர். நேற்று முன்தினம் இரவும், நேற்று அதிகாலையில் பெய்த மழையால் சுமார் 250 ஏக்கர் பரப்புகள் நெற்பயிர்கள் சாய்ந்து விட்டது. ஏற்கனவே கடந்த கார் பருவத்தில் பயிர்கள் விளையவில்லை. இந்நிலையில் தற்போது பிசான பயிர் விளைந்தும் மழையால் பாதிப்பு ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மழை மேலும் தொடர்ந்தால் பயிர்களில் நோய் வரும், மேலும் மேனி குறைவாகதான் கிடைக்கும் சூழ்நிலையும் ஏற்படும். தற்போது ஆம்பூர், ஆழ்வார்குறிச்சி பகுதிகளில் பயிர்கள் சாய்ந்த பகுதிகளை விவசாய அதிகாரிகள் முழுமையாக ஆய்வு செய்து மாவட்ட நிர்வாகத்திற்கு முறையாக தெரிவிக்க வேண்டும். இவர்களுக்கு வரக்கூடிய பாதிப்புகளால் ஏற்படும் நஷ்டத்தை முழு நிவாரணம் பெற்று தரவேண்டும் எனவும் மாவட்ட விவசாயிகள் சங்க செயலாளர் கசமுத்து கோரிக்கை விடுத்துள்ளார்.

**மணிமுத்தாறு அணை பகுதிகளில் பலத்த மழை : அணைகளில் நீர்மட்டம் உயர்வு**

விக்கிரமசிங்கபுரம் : மணிமுத்தாறு அணை பகுதியில் நேற்று முன்தினம் இரவு திடீரென பெய்த மழையில் 216.8 மி.மீ. மழை அளவு பதிவாகியுள்ளது. கடந்த சுமார் ஒருவார காலமாக நெல்லை மாவட்டத்தில் அவ்வப்போது பல இடங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது. இந்நிலையில் நேற்று முன்தினம் காலை விக்கிரமசிங்கபரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் வழக்கத்தை விட வெயிலின் தாக்கம் அதிகளவில் காணப்பட்டது. இரவில் மழை சில மணிநேரம் தொடர்ந்து பெய்தது. இதனால் அணைகளில் நீர்வரத்து அதிகரித்தது. பாபநாசம் அணையின் நீர்மட்டம் நேற்று காலை நிலவரப்படி 46.50 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 435.90 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து 500 கனஅடிநீர் வெளியேறியது. சேர்வலார் அணையின் நீர்மட்டம் நேற்று 60.10 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 80.60 அடியாகவும் இருந்தது. நேற்று காலை நிலவரப்படி பாபநாசம் அணையில் 45 மி.மீ., அம்பையில் 71, சேரன்மகாதேவியில் 35 என்ற அளவில் மழையின் அளவு பதிவாகியிருந்த நிலையில் மணிமுத்தாறு அணைப்பகுதியில் 216.8 மி.மீ. அளவு மழை பதிவாகியுள்ளது. நேற்று முன்தினம் இரவில் மழை பெய்துள்ளதால் அணைகளின் நீர்பிடிப்பு பகுதிகளிலிருந்து அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரிக்க துவங்கியுள்ளது. இதனால் பாபநாசம் மற்றும் மணிமுத்தாறு அணைகளின் நீர்மட்டம் இன்று சில அடி உயர வாய்ப்புள்ளதாக தெரிகிறது.

**நெல்லை மாவட்டத்தில் பரவலான மழை குற்றாலம் அருவிகளில் தண்ணீர் வரத்து**

குற்றாலம்த்: நெல்லை மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. குற்றாலம் அருவிகளில் தண்ணீர் விழுந்தது.

தமிழகத்தில் கடந்த சில தினங்களாக மழைபெய்து வருகிறது. மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளிலும் மழை பெய்து வருவதால் வறண்டு காணப்பட்ட குற்றால அருவிகளில் கடந்த இரண்டு தினங்களாக தண்ணீர் சுமாராக விழுந்தது. நேற்று முன்தினம் இரவு நெல்லை மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. தென்காசி, குற்றாலம், செங்கோட்டை பகுதிகளில் மழை பெய்தது. நேற்று காலையிலும் மழை பெய்தது. குற்றாலம் மலைப்பகுதிகளில் பெய்த கனத்த மழை காரணமாக மெயின்அருவி, ஐந்தருவி, பழையகுற்றாலம், புலியருவி போன்ற அருவிகளில் தண்ணீர்வரத்து அதிகளவில் இருந்தது. வறண்டு கிடந்த குற்றாலம் அருவிகளில் தண்ணீர் வருவதை கண்ட பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர். நெல்லை: நெல்லையில் நேற்று முன்தினம் இரவு முதல் இடியும், மின்னலுமாக காணப்பட்டது. நேற்று காலையில் லேசான வெயில் அடித்தது. தொடர்ந்து காலை 11 மணிக்கு திடீரென மேகக்கூட்டங்கள் திரண்டு, கனமழை பெய்தது. சுமார் 45 நிமிடம் பெய்த மழையால் ரோடுகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் குளிர்ச்சியான சீதோஷ்ண நிலை உருவானது.

### சாகுபடி குறைவால் விதை நெல் கிடைப்பதில் பற்றாக்குறையால் விலை இரு மடங்காக உயர்வு

கோபிசெட்டிபாளையம்: கோபி பகுதியில் நெல் சாகுபடி குறைந்ததால் விதை நெல் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. விதை நெல் பற்றாக்குறையால் விலை இரு மடங்களாக உயர்ந்துள்ளது.கோபி சுற்று வட்டாரத்தில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை மற்றும் எல்.பி.பி., ஆகிய பாசனங்கள் மூலம், 30 ஆயிரம் முதல், 50 ஆயிரம் ஏக்கர் வரை நெல் சாகுபடி செய்யப்படுகிறது.கோபி வேளாண் உற்பத்தி சங்கம் சார்பில் விவசாயிகளிடம் இருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. நெல்லில் உள்ள கலப்படம், தரம் குறைவு போன்றவற்றை, வேளாண் உற்பத்தி சங்கத்தில் உள்ள "ஃபிரிக் கிளீனிர்' என்ற இயந்திரம் மூலம் தரம் பிரிக்கப்படுகிறது. இந்த விதை நெல் தினமும், 10 டன் உற்பத்தி செய்யப்பட்டது. சங்கத்தில் ஏ.எஸ்.டி., ஏ.டி.டி., 45, ஏ.டி.டி., 39, ஏ.டி.டி., 38, பி.பி.டி., 5204 (டீலக்ஸ் பொன்னி), ஐ.ஆர்., 20, கோ., 43 மற்றும் குண்டு ரக போன்ற நெல் விதைகள் விற்பனை செய்யப்படுகிறது.இச்சங்கத்தில் தயாராகும் விதை நெல், சேலம், ஈரோடு, நாமக்கல், கரூர், திருச்சி, தஞ்சை, திருவாரூர், புதுக்கோட்டை, பெரம்பலூர், கடலூர், நாகை உள்ளிட்ட, 11 மாவட்டங்களுக்கு, ஒவ்வொரு ஆண்டும், 500 முதல், 750 டன் வரை விதை நெல் அனுப்பப்படுகிறது.

பாசனங்களில் தண்ணீர் இல்லாததால் நெல் சாகுபடி இல்லை. கிணற்று நீர் பாசனத்தில் சாகுபடி செய்யப்படும் விதை நெல்லை மட்டுமே நம்ப வேண்டி உள்ளது. சென்ற காலங்களில் ஒரு கிலோ விதை, 14.50 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்பட்டது. பற்றாக்குறை காரணமாக, தற்போது ஒரு கிலோ, 20 முதல், 22 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்படுகிறது. தரம் பிரிப்பு உள்ளிட்ட செலவால், ஒரு கிலோ, 30 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெளிமார்க்கெட்டில் பொன்னி, பி.பி.டி., போன்றவை ஒரு கிலோ, 40 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்யப்படுகிறது.வேளாண் உற்பத்தி சங்க அதிகாரி கூறியதாவது: கோபி வேளாண் உற்பத்தி சங்கத்தில் ஏ.எஸ்.டி., ஒரு கிலோ, 25 ரூபாய், ஏ.டி.டி.,45 - 24 ரூபாய், ஏ.டி.டி.,39 - 24 ரூபாய், ஏ.டி.டி., 38 - 23 ரூபாய், பி.பி.டி., - 5204 (டீலக்ஸ் பொன்னி) - 26 ரூபாய், ஐ.ஆர்.,20 - 24 ரூபாய், கோ.,43 - 23 ரூபாய், குண்டு ரகம் - 11 ரூபாய் விற்கப்பட்டது. ஈரோடு மாவட்ட பாசனங்களில் தண்ணீர் திறக்கப்படாததால் வெளிமாவட்டங்களுக்கு இதுவரை, 750 டன் வரை விதை நெல் அனுப்பப்பட்டுள்ளது. பாசனப்பகுதியில் நெல் சாகுபடி இல்லாததால் விதை நெல் கிடைக்கவில்லை.தாராபுரம், மேட்டூர் பகுதியில் இருந்து விதை நெல் கொள்முதல் செய்து வருகிறோம். சங்கத்தில் ஐ.ஆர்., 40 டன், ஏ.டி., 39 விதை ஒரு டன் மட்டுமே இருப்பு உள்ளது. மற்ற விதை நெல் இருப்பு கிடையாது. நடப்பாண்டு விதை நெல் இல்லாததால் விவசாயிகளிடம் இருந்து ஒரு கிலோ, 20 ரூபாய்க்கு கொள்முதல் செய்கிறோம். தரம் பிரிக்கப்பட்ட பின், ஒரு கிலோ, 30 ரூபாய்க்கு விற்பனை செய்கிறோம். வெளி மார்க்கெட்டில் பொன்னி, பி.பி.டி., போன்ற ஒரு கிலோ, 40 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. சித்திரை பட்டத்துக்காக மேட்டூரில், 100 ஏக்கரில் விதை நெல் ஆர்டர் கொடுத்துள்ளோம். தவிர அத்தாணி, சத்தி உள்ளிட்ட பகுதியில் ஒரு ஏக்கர் முதல் இரண்டு ஏக்கர் வரை ஆர்டர் கொடுத்துள்ளோம். சித்திரை பட்டத்துக்கு, 250 டன் விதை நெல் தயார்படுத்தி விடுவோம். இவ்வாறு அவர் கூறினார்

### விவசாயிகள் ஆறுதல்

மஞ்சூர்:மஞ்சூர் அடுத்துள்ள எடக்காடு பகுதியில் பெய்த மழையால் விவசாயிகள் ஆறுதல் அடைந்தனர்.கடந்த ஆண்டில் போதுமான மழை பெய்யாததால், முக்கிய நீராதாரங்கள் வற்றின. மின் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் அணைகளும் தண்ணீரின்றி பாதிக்கப்பட்டது. கடந்த 5 நாட்களாக மாவட்டத்தின் அனைத்து பகுதியில் மேகமூட்டம் தென்பட்டது. ஆனால், மழை

பெய்யாததால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்தனர். இந்நிலையில், மஞ்சூர் அடுத்துள்ள எடக்காடு பகுதியில் அரை மணி நேரம் நீடித்த மழையால் விவசாயிகள் ஆறுதல் அடைந்தனர்.

## இலை நிற அட்டையை பயன்படுத்திநெற்பயிரில் தழைச்சத்து உர நிர்வாகம்

மறைமலை நகர்:நெற்பயிரில், தழைச்சத்து உரம் என்பது, பிரதான இடுபொருளாகும். சமச்சீரற்ற மற்றும் சரியில்லாத தருணத்தில், தழைச்சத்து உரம் இடுவதால், நஞ்சை நெற்பயிரில் இதன் உபயோகத்திறன் குறைவதுடன், விரயமும் அதிகமாகிறது. இப்பிரச்னைக்கு தீர்வாக, இலை நிற அட்டையை பயன்படுத்தி, தழைச்சத்து உர நிர்வாகம் செய்யலாம்.இலை நிற அட்டை என்பது, சுலப முறையில் பயன்படுத்த கூடிய, செலவில்லாத உபகரணம் ஆகும். இது, தழைச்சத்து நிலையுடன் தொடர்பு கொண்ட இலை நிற செறிவு ஆகும். இந்த அட்டையில் பச்சை நிறம் 1 - 6 வகையில்வேறுபடுகிறது.பயன்படுத்தும் முறை:நடவு நட்ட, 14ம் நாள் முதல், பூக்கும் பருவம் வரை இலை நிற அட்டையை பயன்படுத்தி, குறியீட்டை எடுக்கவேண்டும்.சீரான பயிர் எண்ணிக்கை உள்ள வயலில்நோய் தாக்காத இலையின் நிறச்செறிவு, ஒரு குறிப்பிட்ட அளவிற்குமேல் இருந்தால், பயிரில்தேவையான தழைச்சத்து உள்ளது என்று பொருள். எனவே, இதற்குமேல் உரம் இடத்தேவையில்லை.

நிலச்செறிவு குறிப்பிட்ட அளவிற்கு கீழ் இருந்தால்,மேல் உரம் இடவேண்டும்.வயலில், பத்து செடிகளை அங்கொன்றும், இங்கொன்றும்தேர்வு செய்து, ஒவ்வொரு செடியிலும், நன்கு பரந்து, விரிந்தமேல் மட்டத்தில் உள்ள இலைகளைதேர்வு செய்யவேண்டும்.இலையின் நடுப்பகுதியை, இலை நிற அட்டையில் வைத்து, நிற ஒப்புமை செய்யவேண்டும். இலையின் நிறம், இரண்டு நிறச் செறிவுக்கு இடையில் இருந்தால், இரண்டிற்கும் இடைப்பட்ட மதிப்பை எடுத்துக்கொள்ளவேண்டும்.

இலைகளை சேதப்படுத்த கூடாது.இலையின் நிறத்தைசோதிப்பவர்கள், நிழலில் வைத்து ஒப்புமை செய்யவேண்டும். இல்லையெனில், சூரிய ஒளியின் தாக்கம் குறியீட்டை தாக்கும் .ஒவ்வொரு முறையும், ஒரு குறிப்பிட்டநேரத்தில், குறியீட்டு அளவை ஒப்பீடு செய்யவேண்டும்.இம்முறையை, 7 -10 நாட்கள் இடைவெளியில், கடைபிடிக்கவேண்டும்.மேலும் விவரங்களுக்கு, காட்டுப்பாக்கம்,வேளாண்மை அறிவியல் நிலையத்தில், 044- 2745 2371 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## காஞ்சிபுரம் மாவட்டத்தில் இன்றுசொட்டு நீர் பாசனம் சிறப்பு முகாம்

காஞ்சிபுரம்:காஞ்சிபுரம் மாவட்டத்தில், ஏழு இடங்களில் சொட்டு நீர் பாசனம் சிறப்பு முகாம்கள், இன்று நடைபெற உள்ளன.விளை நிலங்களில் சொட்டு நீர் பாசன வசதி குறித்து விவசாயிகள் இடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும், விவசாயிகளிடம் விண்ணப்பம் பெற்று, சொட்டு நீர் பாசன வசதிக்கு விண்ணப்பிக்கவும் வசதியாக, முகாம்கள் நடத்தப்படுகின்றன.காஞ்சிபுரம் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் வட்டத்திற்கான முகாம், இன்று காலை 11:00 மணியிலிருந்து பகல் 1:00 மணி வரை, மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் நடைபெறும்.

உத்திரமேரூர் வட்டத்திற்கு, வட்டாட்சியர்
அலுவலகத்தில், வேளாண்மை இணை இயக்குனர் அலுவலகத்தில் முகாம் நடைபெறும். மதுராந்தகம் வட்டத்திற்கு, வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையிலும், செய்யூர் வட்டத்திற்கு, வட்டாட்சியர் அலுவலகத்தில், வேளாண்மை துணை இயக்குநர்(உழவர் பயிற்சி நிலையம்) தலைமையிலும் நடைபெறும்.திருப்போரூர் வட்டத்திற்கு, வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகத்தில், வேளாண்மை துணை இயக்குனர்(மத்திய திட்டம்) தலைமையிலும், திருக்கழுக்குன்றம் வட்டத்திற்கு, வட்டாட்சியர் அலுவலகத்தில், தோட்டக்கலைத் துறை துணை இயக்குனர் தலைமையிலும், முகாம் நடைபெறும்.இம்முகாம்கள் அனைத்தும் காலை 11:00 மணியிலிருந்து, பகல் 1:00 மணி வரை செயல்படும். செங்கல்பட்டு வட்டத்திற்கு, வனத்துறை ஆராய்ச்சி நிலைய அலுவலகத்தில், மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) தலைமையில், மாலை 3:00 மணியிலிருந்து 5:00 மணி வரையில் முகாம் நடைபெறும்.
முகாமில், சொட்டு நீர் பாசன வசதி ஏற்படுத்த விரும்பும் விவசாயிகள், அதற்கான விண்ணப்பம், பட்டா நகல், சிட்டா நகல், அடங்கல், நில அளவை வரைபடம், புகைப்படம், ஆகியவற்றுடன் கலந்து கொள்ள வேண்டும். ஏற்கனவே விண்ணப்பித்த விவசாயிகள், சிறு,குறு விவசாயி சான்று பெற கலந்து கொள்ளலாம்.

## வானூர் பகுதியில் நெற்பயிர்கள் சேதம்

வானூர் : வானூர் பகுதியில் நெற்பயிர்கள் தண்ணீரின்றி காய்ந்து வருவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.வானூர் தாலுகாவில் இந்தாண்டு பருவமழை பெய்யாத காரணத்தால்

நெற்பயிர் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. மழையை நம்பி பயிர் செய்த விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது. உப்புவேலூர் அருகே உள்ள வங்காரம் கிராமத்தில், விவசாயிகள் இந்தாண்டு 50 ஏக்கர் அளவில் நெற்பயிர் சாகுபடி செய்திருந்தனர். ஏக்கர் ஒன்றுக்கு 15 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்து நடவு செய்தனர். ஏரியில் இருந்த குறைந்தளவு தண்ணீரை வைத்து நடவுக்கு தண்ணீர் பாய்ச்சி வந்தனர். ஏரி நீரும் வறண்டு போனதால், கதிர் வரும் நேரத்தில் தண்ணீர் இன்றி நெற்பயிர்கள் காய்ந்து வருகிறது. பாதிக்கப்பட்ட விவசாயிகள் சிலர், காய்ந்த நெற்பயிரில் மாடுகளை மேய்த்து வருகின்றனர். நெற்பயிர் காய்ந்து போனதால், அரசு நிவாரணம் வழங்க வேண்டும். இது குறித்து பாதிக்கப்பட்ட விவசாயிகள் சார்பில் கலெக்டருக்கு கோரிக்கை மனு அனுப்பி உள்ளனர்.

## வேளாண் தொழில்நுட்ப கலந்துரையாடல் நிகழ்ச்சி

சின்னசேலம் : சின்னசேலத்தில் வேளாண்துறையின் ஆத்மா திட்டத்தின் மூலம் விவசாயிகள், விஞ்ஞானிகள் பங்கேற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சி நடந்தது. சின்னசேலம் ஆக்ய விநாயகர் மண்டபத்தில் நடந்த நிகழ்ச்சிக்கு சேர்மன் ராஜேந்திரன் தலைமை தாங்கினார். துணை வேளாண் இயக்குனர் ரத்தினசபாபதி முன்னிலை வகித்தார். உதவி இயக்குனர் கோவிந்தன் வரவேற்றார். வேளாண்மை அறிவியல் நிலைய பேராசிரியர் சாத்தையா, உதவி பேராசிரியர் அன்புமணி ஆகியோர் விவசாயிகளுக்கு வேளாண்மை தொழில்நுட்பங்கள் குறித்து ஆலோசனை வழங்கினர். உற்பத்தி மற்றும் வருமானத்தை உயர்த்துவது குறித்து விஞ்ஞானிகள் ஆலோசனை வழங்கினர். துணை வேளாண் அலுவலர் பழனிவேல், வட்டார தொழில்நுட்ப மேலாளர் மவிசுதா, ஜெயபாலன், அன்பு, துரை, ஆரோக்கியசாமி, முருகேசன், தியாகராஜன், தங்கதுரை ஆகியோர் ஏற்பாடுகளை செய்திருந்தனர். உதவி வேளாண் அலுவலர் ரஜினிகாந்த் நன்றி கூறினார்.

## சூரியகாந்தி சாகுபடி விவசாயிகள் ஆர்வம்

கள்ளக்குறிச்சி : கல்வராயன்மலை அடிவார கிராம பகுதிகளில் சூரியகாந்தி பயிர் செய்வதில் விவசாயிகள் தீவிர ஆர்வம் காட்டி வருகின்றனர். கள்ளக்குறிச்சி அருகே கல்வராயன்மலை அடிவார கிராமங்களில் மரவள்ளி, நெல், கரும்பு, மக்காச்சோளம், மணிலா மற்றும் தோட்டப் பயிர்கள் பயிர் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் குறுகிய காலத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும் என்பதால், மலையடிவார கிராமங்களில் சூரியகாந்தி பயிர் செய்வதில் சமீப காலமாக விவசாயிகள் தீவிர ஆர்வம் செலுத்தி வருகின்றனர். பாச்சேரி கிராமத்தில் பயிர் செய்யப்பட்டுள்ள

சூரிய காந்தி செடி நன்கு வளர்ந்து பூத்து குலுங்குகிறது. செழித்து வளர்ந்துள்ள சூரியகாந்தி பூக்கள் மனதை கவரும் வகையில் ரம்மியமாக காட்சியளிக்கிறது.

## 2வது சீஸனில் நிலக்கடலை வரத்து அதிகரிப்பு மூட்டைக்கு ரூ.133 வரை விலை உயர்வு

சேலம்: சேலம், நாமக்கல், ஈரோடு மாவட்டத்தில் பரவலாக நிலக்கடலையை பயிரிடுகின்றனர். சில மாதங்களாக நிலக்கடலைக்கு உரிய விலை கிடைத்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். செப்டம்பர், அக்டோபர், நவம்பர் ஆகிய மாதங்களில் நிலக்கடலை சீஸன். இந்த காலக்கட்டத்தில், அதிகளவு நிலக்கடலை அறுவடை இருக்கும். கடந்தாண்டு நிலக்கடலைக்கு அதிக விலை கிடைத்தது. தற்போது, நிலக்கடலை அறுவடையின் இரண்டாவது சீஸன் துவங்கியுள்ளது.

சேலம், பள்ளப்பட்டியில் உள்ள, சேலம் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நிலக்கடலை, மஞ்சள் ஏலம் தினமும் நடந்து வருகிறது. நேற்று, சேலம் மாவட்டம் காடையாம்பட்டி, ஓமலூர், பசுவனத்தம்பட்டி, மயிலாபாளையம், வேலம்பாளையம், மேட்டுப்பட்டி, செங்குட்டை, எரிசணம்பட்டி, மாரப்பட்டி, நாட்டாமங்கலம் உள்பட பல இடங்களில் இருந்து, 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் நிலக்கடலையை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.இது குறித்து விவசாயிகள் கூறியதாவது:இரண்டாவது சீஸன் இந்த மாதம் ஆரம்பித்துள்ளது. கடந்த வாரம், 60 கிலோ நிலக்கடலை மூட்டை அதிகபட்சமாக, 1,689 ரூபாய்க்கு விற்பனையானது. இன்று (நேற்று) நடந்த ஏலத்தில், 60 கிலோ மூட்டை, 1,822 ரூபாய்க்கு விற்பனையானது. கடந்த வாரத்தை விட ஒரு மூட்டைக்கு 133 ரூபாய் கூடுதலாக கிடைத்துள்ளது. இரண்டாவது சீஸன் இன்னும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும். அப்போது, நிலக்கடலைக்கு மேலும் கூடுதல் விலை கிடைக்கும், என எதிர்பார்க்கிறோம். சேலம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து, 400 மூட்டை நிலக்கடலையை விவசாயிகள் கொண்டு வந்தனர். மிட்டாய் வியாபாரிகள் அதிகளவு நிலக்கடலையை வாங்கி செல்கின்றனர்.இவ்வாறு அவர்கள் கூறினர்.

## சேலத்தில் 4,939 ஏக்கர் விவசாய நிலம் பாதிப்பு

சேலம்: காவிரியில் தண்ணீர் இல்லாததும், கடும் வறட்சியாலும், சேலம் மாவட்டத்தில், 4,939 ஏக்கர் விவசாய நிலம் பாதிக்கப்பட்டுள்ளது. நஷ்டமடைந்த விவசாயிகளுக்கு, நிவாரணம் வழங்குவது தொடர்பாக, பயிர்களை பார்வையிட வருவாய் நிர்வாக ஆணையக்குழு, விரைவில்

சேலம் வர உள்ளது.ஒவ்வொரு ஆண்டும், அக்டோபர், நவம்பர் மாதங்களில் வட கிழக்கு பருவமழையின் தாக்கம் அதிகப்படியாக இருக்கும். சில ஆண்டுகளாக, தமிழகத்தில் குறிப்பிடும்படியாக மழை இல்லை. கர்நாடக அரசு, தமிழகத்துக்கு தரவேண்டிய தண்ணீரையும் வழங்காமல் ஏமாற்றி வருகிறது.மேட்டூர் அணையில் இருந்து பாசனத்துக்கு திறந்து விடப்படும் தண்ணீரால், நெல் சாகுபடி செய்யும், 12 டெல்டா மாவட்ட விவசாயிகள் பயனடைவர். காவிரியில் தண்ணீர் திறந்து விட, கர்நாடக அரசு மறுப்பதால், அணை வறண்டு போய், விவசாயத்துக்கு மட்டுமின்றி, குடிநீருக்கும் கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. மழை இல்லாததும், கர்நாடகத்தின் பிடிவாதமும், தமிழக விவசாயிகளை கவலையடைய செய்துள்ளது.

தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்பு இல்லாதபோதும், சேலம் மாவட்டத்தில் ஓரளவு விவசாயம் பாதிப்படைந்துள்ளது. இம்மாவட்டத்தில், நெல், கரும்பு, மக்காச்சோளம், ராகி உள்ளிட்டவை அதிகப்படியாக பயிரிடப்படுகின்றன. அந்த வகையில், 30 ஆயிரத்து, 900 ஏக்கரில் நெல்லும், 70 ஆயிரத்து, 225 ஏக்கரில் சிறு தானியங்களும், 41 ஆயிரத்து, 900 ஏக்கரில் கரும்பும், 8,750 ஏக்கரில் நிலக்கடலையும் பயிரிடப்பட்டன. மொத்தம் உள்ள, 6.72 லட்சம் ஏக்கர் நிலத்தில், 4.22 லட்சம் ஏக்கரில் மட்டுமே விவசாயம் செய்யப்படுகிறது.வறட்சி பாதித்த மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கு, ஏக்கருக்கு, 15 ஆயிரம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்படும் என, தமிழக அரசு அறிவித்துள்ளது. இந்நிலையில், சேலம் மாவட்டத்தில், பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட, வருவாய் நிர்வாக ஆணையக்குழு வருகை தர உள்ளது.வேளாண் அதிகாரிகள் மேற்கொண்ட ஆய்வில், 851 ஏக்கர் நெல்லும், 3,578 ஏக்கர் மக்காச்சோளமும், 131 ஏக்கர் நிலக்கடலையும், 379 ஏக்கர் கரும்பு, 162 ஏக்கர் தோட்டக்கலைப்பயிர்களும் பாதிப்புக்குள்ளானது தெரியவந்துள்ளது. இதற்கான அறிக்கையை, வரும், 28ம் தேதிக்குள், அரசுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கையை மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டுள்ளது. வருவாய் ஆணையக்குழு பார்வையிட்ட பின், நிவாரணத்தொகை எவ்வளவு என்பதை அரசு அறிவிக்கும்.

வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:சேலம் மாவட்டத்தில், 6.72 லட்சம் ஏக்கர் நிலங்களில், 3.10 லட்சம் விவசாயிகள் பயிர் செய்து வருகின்றனர். பெரும்பாலான நிலங்களில் அறுவடையாகி விட்டது. சங்ககிரி, இடைப்பாடி, வாழப்பாடி, ஆத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் தான் பாதிப்பு அதிகம் உள்ளது. நெல், கரும்பு, மக்காச்சோளம், கடலை பயிரிட்ட, 4,939 ஏக்கர்

நிலம் பாதிக்கப்பட்டுள்ளது.மஞ்சள், மாங்காய், வாழை என, 162 ஏக்கரில் தோட்டக்கலைப் பயிர்கள் பாதிப்படைந்துள்ளன. நஷ்டம் எவ்வவு என்பதை இப்போது கணக்கிட முடியாது. அதற்கான பணிகள் நடந்து வருகின்றன. நஷ்டத்தொகை, பாதிக்கப்பட்ட விவசாயிகள் குறித்த அறிக்கையை, வரும். 28ம் தேதிக்குள் வழங்குமாறு, அரசு உத்தரவிட்டுள்ளது.அந்த அறிக்கைக்கு பின், சென்னை வருவாய் நிர்வாக ஆணையத்தில் இருந்து அதிகாரிகள் வர உள்ளனர். அவர்கள் பார்வையிட்டு சென்ற பின், தமிழக அரசு நிவாரணத் தொகையை அறிவிக்கும்.இவ்வாறு அவர் கூறினார்.

## ஒரே மாதத்தில் கொண்டக்கடலை விலை சரிவுகுவிண்டாலுக்கு ரூ.1,400 வரை குறைந்தது

சேலம்: மத்திய பிரதேசத்தில் இருந்து, தமிழகத்துக்கு விற்பனைக்கு வரும் கொண்டக்கடலையின் வரத்து அதிகரித்ததால், ஒரே மாதத்தில் குவிண்டாலுக்கு, 1,400 ரூபாய் வரை சரிவு ஏற்பட்டுள்ளது.மத்தியபிரதேசம், மஹாராஷ்டிரா, குஜராத் மாநிலங்களில் இருந்து தமிழகத்துக்கு விற்பனைக்கு வரும் கொண்டக் கடலை வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கடந்த மாதம் வரை, தமிழகத்துக்கு தினசரி, 125 லாரிகளில் மத்திய பிரதேசத்தில் இருந்து விற்பனைக்கு வந்து கொண்டு இருந்த கொண்டக்கடலை, தற்போது, 150 லாரிகள் வரை, விற்பனைக்கு வருகிறது.தமிழகத்தில் கொண்டக்கடலையின் விலை, ஜனவரி மாதம் கடைசி வாரத்தில குவிண்டாலுக்கு, 500 ரூபாய் வரையிலும், கிலோவுக்கு நான்கு ரூபாய் வரையிலும், சரிவு ஏற்பட்டது. நேற்று குவிண்டாலுக்கு, 900 ரூபாயும், கிலோவுக்கு எட்டு ரூபாய் வரையில் சரிவு ஏற்பட்டுள்ளது. ஒரே மாதத்தில் கொண்டக்கடலையின் விலையில் குவிண்டாலுக்கு, 1,400 ரூபாய் வரை, சில்லரை விற்பனையில் கிலோவுக்கு, 12 ரூபாய் வரை சரிவு ஏற்பட்டுள்ளது.
கடந்த ஜனவரி இரண்டாவது வாரத்தில், சிகப்பு கொண்டக் கடலை குவிண்டால், 7,400 ரூபாய்க்கு விற்றது, மூன்றாவது வாரத்தில், 6,900 ரூபாயாகவும், நேற்று மேலும், 900 ரூபாய் சரிவை சந்தித்து, குவிண்டால், 6,000 ரூபாய்க்கு விற்றது.கொண்டக்கடலையை மூலப்பொருளாக கொண்டு தயார் செய்யப்படும் கடலை மாவு, பொட்டு கடலை (வறுகடலை), கடலை பருப்பு ஆகியவற்றின் விலையில் மொத்த விலையில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது.கடந்த ஜனவரி மாதம் கடலை பருப்பு முதல் ரகம் கிலோ, 74 ரூபாய்க்கு விற்றது, இரண்டு முறை விலை சரிவை சந்தித்து, நேற்று முதல் ரகம் கிலோ, 60 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம் கிலோ, 48 ரூபாய்க்கும் விற்கிறது.

பொட்டு கடலை ( வறுகடலை) கடந்த ஜனவரி மாதத்தில் கிலோ, 84 ரூபாய்க்கு விற்றது, 78

ரூபாயாக சரிந்துள்ளது. கடலை மாவு கிலோ, 80 ரூபாய்க்கு விற்றது, 70 ரூபாயாக குறைந்துள்ளது.சேலம், செவ்வாய்ப்பேட்டையை சேர்ந்த கொண்டக்கடலை வியாபாரி பாஸ்கர் கூறியதாவது:வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால், கொண்டக்கடலை, கடலை பருப்பு, கடலை மாவு, வறுகடலை ஆகியவற்றின் விலை மேலும் சரிவு ஏற்பட வாய்ப்பு உள்ளது. கொண்டக்கடலையின் விலை தொடர்ந்து சரிவை சந்தித்து வருவது, பதுக்கல் வியாபாரிகள் மத்தியில் பீதியை ஏற்படுத்தி உள்ளது.தமிழகத்தில் நிலவும் வறட்சியால் கொண்டக்கடலையின் விலையில் அதிகரிப்பு ஏற்படும் என்ற எதிர்பார்ப்பில், 2012 டிசம்பரில் அதிக அளவு கொண்டக்கடலையை கொள்முதல் செய்து பதுக்கி வைத்த வியாபாரிகள், அனைவருக்குமே பெருத்த இழப்பு ஏற்பட்டுள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

### 50% மானியத்தில் தென்னங்கன்றுவினியோகம்: வேளாண் அதி

நாமக்கல்: "வேளாண் விரிவாக்க மையத்தில், 50 சதவீதம் மானிய விலையில், தென்னங்கன்றுகள் வினியோகம் செய்யப்படுகிறது' என, வேளாண் உதவி இயக்குனர் தேடியஸ் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:நாமக்கல் வட்டாரத்தில், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டதட்தின் கீழ், 50 சதவீதம் மானிய விலையில், நெட்டை மற்றும் நெட்டை கிராஸ் குட்டை ரக தென்னங்கன்றுகள் வினியோகம் செய்யப்படுகிறது. நாமக்கல் பி.டி.ஓ., அலுவலக அருகில் அமைந்துள்ள வேளாண் விரிவாக்க மையத்தில், 1,000 எண்ணன், நெட்டை தென்னை மரங்கன்றுகள், 500 நெட்டை கிராஸ் குட்டை ரக தென்னங்கன்றுகள் இருப்பு வைக்கப்பட்டு, வினியோகம் செய்யப்படுகிறது.வெயில் காலமாக இருப்பதால், விவசாயிகள் விரைந்து வந்து, தங்களுக்கு தேவையான கன்றுகளை பெற்றுக்கொள்ள அறிவுறுத்தப்படுகின்றனர். நெட்டைரக தென்னை, 100 ஆண்டுகள் வரை லாபகரமாக வளரும் தன்மை கொண்டது. வறட்சியை தாங்கி வளரும் சக்தியும், ஏழு முதல் எட்டு ஆண்டுகளில் காய்க்கும் தன்மையும் கொண்டவை.நெட்டை கிராஸ் குட்டை ரக தென்னை, 60 முதல், 75 ஆண்டு வரை லாபகரமாக பலன் தரும். அதிக காய் எண்ணிக்கைகளை கொண்ட குலைகளை தரவல்ல இத்தகைய ரக தென்னங்கன்றுகள், நான்கு முதல் ஐந்து ஆண்டுகளில் காய்க்கும் தன்மை கொண்டது.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### 3,599 பருத்தி மூட்டை குவிப்புரூ.54 லட்சத்துக்கு வர்த்தகம்

ராசிபுரம்: வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தில், நேற்று முன்தினம் நடந்த பருத்தி ஏலத்தில், 3,599 மூட்டைகள், 54 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.
ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கம் (ஆர்.சி.எம்.எஸ்.,)

கவுண்டம்பாளையம் குடோனில், வாரம் தோறும் திங்கட்கிழமை பருத்தி ஏலம் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில், 20க்கும் மேற்பட்ட வியாபாரிகள் பங்கேற்றனர். ரகசிய டெண்டர் முறையில், ஏலம் நடந்தது.பட்டணம், முத்துகாளிப்பட்டி, கைலாசம்பாளையம், வேலம்பாளையம், கதிராநல்லூர், குருசாமிபாளையம், சீராப்பள்ளி, தண்ணீர்பந்தல்காடு, ஜேடர்பாளையம், பெரம்பலூர், ஏர்வாடி, புளியங்குறிச்சி, துறையூர், மணிவிழுந்தான்காலனி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள், சாகுபடி செய்த பருத்திகளை, ஏலத்துக்கு கொண்டு வந்தனர்.அதன்படி, ஆர்.சி.ஹெச்., பருத்தி, 1,894ம், டி.சி.ஹெச்., 1,705 என மொத்தம், 3,599 மூட்டைகள் ஏலத்தில் குவிக்கப்பட்டது. அதில், டி.சி.ஹெச்., ரகம் அதிக பட்சம், 5,235, குறைந்த பட்சம், 4,600 ரூபாய்க்கும், ஆர்.சி.ஹெச்., ரகம் அதிக பட்சம், 4,836, குறைந்த பட்சம், 3,990 ரூபாய்க்கும் ஏலம் போனது.

விவசாயிகள், ஏலத்தில் கொண்டு வரும் பருத்திக்கு ஏலம் முடிந்தவுடன் உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்வதால், உள்ளூர் மற்றும் வெளிமாவட்ட விவசாயிகள், அதிகளவில் பருத்தி மூட்டைகளை கொண்டு வந்து விற்பனை செய்வதாக, சங்கச் செயலாளர் மணிவண்ணன், மேலாளர் சேகர் ஆகியோர் தெரிவித்தனர்.நாமக்கல, சேலம், கொங்கணாபுரம், திருச்செங்கோடு, அவினாசி, அன்னூர், அருப்புக்கோட்டை, விருதுநகர், ஆத்தூர், தொடாவூர் ஆகிய பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் பங்கேற்று, பருத்தியை ஏலம் எடுத்தனர். நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில், பருத்தி மூட்டைகள், 54 லட்சம் ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது.

### கோதுமை கொள்முதல்4.40 கோடி டன்னை எட்டும்



புதுடில்லி:வரும், 2013-14ம் சந்தைப்படுத்தும் பருவத்தில் (ஏப்ரல்-மார்ச்), நாட்டின் கோதுமை கொள்முதல், 4.40 கோடி டன்னை தாண்டும். இது, கடந்த ஆண்டின் சாதனை கொள்முதல்

அளவான, 3.81 கோடி டன்னை காட்டிலும், 15 சதவீதம் அதிகம் என, மத்திய உணவு அமைச்சர் கே.வி.தாமஸ் தெரிவித்தார்.

மதிப்பீட்டு பருவத்தில் கோதுமை உற்பத்தி, கடந்த பருவத்தை விட, 26 லட்சம் டன் குறைந்து, 9.23 கோடி டன்னாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டு உள்ளது.இந்த நிலையிலும், வரும் சந்தைப்படுத்தும் பருவத்தில், நாட்டின் கோதுமை கொள்முதலை, 4.40 கோடி டன்னாக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இது, கடந்த பருவ கொள்முதலை விட, 59 லட்சம் டன் அதிகமாகும் என, தாமஸ் மேலும் தெரிவித்தார். நாட்டின் கோதுமை கொள்முதல், ரபி பருவத்தில் தான் அதிகமாக மேற்கொள்ளப் படுகிறது.

## கொப்பரை வரத்து அதிகரிப்பால்தேங்காய் எண்ணெய் விலை சரிவு



கொச்சி:கேரளா மற்றும் தமிழகத்தில், கொப்பரை வரத்து அதிகரித்துள்ளதால், தேங்காய் எண்ணெய் விலை சரிவடைந்துள்ளதாக, கொச்சி எண்ணெய் வர்த்தகர்கள் சங்கத்தின் துணைத் தலைவர் பிரகாஷ் பீ.ராவ் தெரிவித்துள்ளார்.தமிழகம்நடப்பு வாரத்தில், கேரளாவில், ஒரு கிலோ தேங்காய் எண்ணெய் விலை, 65 ரூபாயாக சரிவடைந்துள்ளது.

சென்ற வாரத்தில் இதன் விலை, 67 ரூபாயாக இருந்தது. தமிழகத்தில் இதன் விலை, 64லிருந்து, 63 ரூபாயாக குறைந்துள்ளது.இருப்பினும், மேற்கண்ட இரண்டு மாநிலங்களிலும், கொப்பரையின் விலை மாற்றமின்றி இருந்தது. கேரளாவில், ஒரு குவிண்டால், கொப்பரையின் விலை, 4,700 ரூபாயாகவும், தமிழகத்தில், 4,600 ரூபாயாகவும் உள்ளது.கேரளாவின் கண்ணூர் மற்றும் காசர்கோடு ஆகிய மாவட்டங்களில் இருந்து, கொப்பரை வரத்து அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

இதையடுத்து, இனி வரும் வாரங்களில், கொப்பரை மற்றும் தேங்காய் எண்ணெய் விலை, மேலும் குறைய வாய்ப்புள்ளது என, ராவ் மேலும் தெரிவித்தார்.பாமாயில்பாமாயில் மற்றும் எண்ணெய்

பனை பருப்பிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் ஆகியவற்றின் விலை, சென்ற வார விலையை ஒட்டியே, அதாவது, முறையே (ஒரு கிலோ), 52 ரூபாய் மற்றும் 53 ரூபாய் என்ற அளவில் உள்ளது.

### ஏலக்காய் விலை வீழ்ச்சிகவுதமாலா காரணமா?




கொச்சி:கவுதமாலாவிலிருந்து, அதிகளவில் மலிவு விலையில், ஏலக்காய் இறக்குமதியாக உள்ளதாக வெளியான தகவலை அடுத்து, உள்நாட்டு சந்தைகளில், ஏலக்காய் விலை வீழ்ச்சி கண்டுள்ளது.அதே சமயம், உலகளவில், இந்திய ஏலக்காய்க்கான தேவை அதிகரித்துள்ளதால், உள்நாட்டில் இதன் விலை மேலும், சரியாமல் தடுத்து நிறுத்தப்பட்டு உள்ளதாக, இத்துறையைச் சேர்ந்த வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

சென்ற வாரத்தில், உள்நாட்டு சந்தைகளில், தரம் வாய்ந்த, ஒரு கிலோ ஏலக்காய் விலை, 700 ரூபாயிலிருந்து, 640 ரூபாயாக சரிவடைந்தது.நடப்பு பருவத்தில், சென்ற 2012ம் ஆண்டு ஆக.,1ம் தேதி முதல், நடப்பாண்டு பிப்., 17ம் தேதி வரையிலான காலத்தில், சந்தைக்கு ஏலக்காய் வரத்து, 8,400 டன்னாகவும், இதன் விற்பனை, 7,969 டன்னாகவும் உள்ளது.கடந்த பருவத்தின் இதே காலத்தில் ஏலக்காய் வரத்து, 12,793 டன்னாகவும், விற்பனை, 12,457 டன்னாகவும் இருந்தது. ஆக, நடப்பு பருவத்தில், இதன் வரத்தும், விற்பனையும் குறைந்து போயுள்ளது என, இத்துறை சார்ந்த நிறுவனத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விவசாய மலர் செய்தி

### நீர்க்கடம்பை வளர்ப்பு



நீர்க்கடம்பை மரம் என்பது அடம்பை, கடப்பை என்ற பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. ஏரி, குளம், ஆறு ஆகிய நீர் சுரப்பிகளில் இந்த மரத்தைக் காணலாம். இது நீர்நிலைகளைத் தூய்மைப்படுத்தும் ஒரு சிறப்பான மரமாகும். இதன் இலைகள் நீர்த்தடாகங்களில் விழும்போது அந்த நீர் குடிநீராக மாறுகிறது என்று கூறப்படுகிறது.

ஆறில் இருந்து ஒன்பது மீட்டர் வரை இந்த மரத்தின் உயரம் படர்ந்து விரிந்து வளர வல்லது. இது பசுமை மாறாத இலைகளைக் கொண்டுள்ளது. இலைகள் தலைகீழாக முட்டை வடிவத்தில் தொங்கும் நிலையில், மிகவும் அழகான சிறிய சிவப்பு பூக்களுடன் காணப்படுகின்றன.

மேலும் இந்த இலைகள் சரீரத்தில் ஓரளவு கேடான நுண்ணுயிர்களைக் கட்டுப்படுத்தும் ஆற்றலையும் கொண்டுள்ளன. முக்கியமாக வயிற்றுப்போக்கு ஏற்படுவதற்கு காரணமாக உள்ள நுண்ணுயிர்களைக் கட்டுப்படுத்துகின்ற ஒருவகையான மருத்துவப்பண்பு கொண்டுள்ள விசேஷ பொருள் இதன் இலைகளில் காணப்படுகிறது என்பதாக வேதியியல் விஞ்ஞானிகள் விளம்புகின்றனர்.

இந்த மரத்தின் பட்டைகள், நீர்த் தடாகங்களில் உள்ள மீன்களை மயக்கம் அடையச் செய்யும் ஒருவிதமான ஒவ்வாமைப் பொருளைக் கொண்டுள்ளன. பெரும்பாலும் கிராமிய மீனவர்கள் மீன்களை ஓரிடத்தில் தொகுப்பாகப் பிடிப்பதற்கு என்றே இந்த மரப்பட்டைகளைச் சிதைத்து நீரில் இட்டு பயன் அடைகிறார்கள். பொதுவாக இந்த நீர்க்கடம்பை மரங்களை வளர்ப்பதால் ஏற்படும் நன்மைகள் பல உள்ளன. பெரும்பாலும் மரத்தின் ஒவ்வொரு பாகமும் மருத்துவ குணம் கொண்டதாகும்.

இதன் விதைகள் தூளாக்கப்பட்டு இருமல் நீக்கியாகவும் தலைவலியைப் போக்கிடும் மூக்குப் பொடியாகவும் பயன்படுகின்றன. இலைகளும் வேர்களும் (துவர்ப்புடன் கூடிய) ஊட்டம் அளிக்கின்ற டானிக் ஆக உருவாகின்றது. உடலுக்கு குளிர்ச்சியைத் தரும் மருந்துகளின்

தயாரிப்புகளில் வேர் வெகுவாகப் பிரயோகிக்கப்படுகிறது.

""இத்தகைய உயர்ந்த மருத்துவப் பண்புகள் கொண்டுள்ளமைக்கு காரணம் "பேரிஸ்டோனின்' என்ற "சேப்போனின்' வகை குளுக்கோசைடே ஆகும். மரத்தின் பட்டையைப் பொறுத்த அளவில் பதினாறு சதவீத அளவுக்கு "டேனின்' காணப்படுகின்றது என்பது விஞ்ஞான ஆய்வு" - புதுச்சேரி மருத்துவர் என்.லோகநாதன். (ஆதாரம்: ஸ்பைசஸ் இந்தியா, சஞ்சிகை, கொச்சி).

தண்ணீர் வசதி உள்ள விவசாயிகள் இந்த நீர்க்கடம்பை மரங்களை வளர்ப்பதன் மூலம் அந்த நீர் சுத்தமும் சுவையும் சுகமும் அளிக்கின்றது எனலாம். நாட்டு மருந்து தயாரிப்பாளர்களுக்கு இந்த மரத்தின் பாகங்களை விற்பதன் மூலம் நல்ல வருமானம் பெறலாம். மிகுந்த நிழலை அளிப்பதாலும் குளிர்ச்சியைத் தருவதாலும் இந்த மரம் நீர்நிலைகளில் வளர்வதற்குப் பேருதவியாக அமையும்.

## சின்னச்சின்ன செய்திகள்



**ஏலக்காய் நாற்றங்கால் பராமரிப்பு:**

நாற்றங்காலில் தேவைக்கேற்ப சீரான இடைவெளியில் தண்ணீர் ஊற்ற வேண்டும். நாற்றழுகல் நோயைக் கட்டுப்படுத்த 0.2 சத காப்பர் ஆக்சி குளோரைடு அல்லது 0.2 சத மான்கோசெப் கரைசலை (100 லிட்டர் தண்ணீரில் 200 கிராம்) நாற்றங்காலில் மண் நனையும் படி ஊற்ற வேண்டும். டிரைக்கோடெர்மா அல்லது சூடோமோனாஸ் அல்லது பேசில்லசை உபயோகித்து உயிரி கட்டுப்பாட்டு முறையில் நாற்றழுகல் நோயைக் கட்டுப்படுத்தலாம்.

இலைஅழுகல் நோயைக் கட்டுப்படுத்த 0.3 சத மான்கோசெப் கரைசலை (100 லிட்டர் தண்ணீரில் 300 கிராம்) தெளிக்க வேண்டும். இலைப்புள்ளி நோயின் ஆரம்ப அறிகுறி காணப்பட்டால் அதனைக் கட்டுப்படுத்த 0.25 சத டைபோலாடான் (100 லிட்டர் தண்ணீரில் 250 கிராம்) அல்லது

0.2 சத பெவிஸ்டினை (100 லிட்டர் தண்ணீரில் 200 கிராம்) தெளிக்க வேண்டும்.

**ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம்:** தட்டையில் பச்சையாக உள்ள இலை உறையை அகற்றாமல் காய்ந்த இலைகளை மட்டும் கவாத்து செய்ய வேண்டும். குயினால்பாஸ் பூச்சிக்கொல்லியை (100 லிட்டர் தண்ணீரில் 200 மிலி) அல்லது புளூபென்டாமைடு பூச்சிக்கொல்லியை 100 லிட்டர் தண்ணீரில் 150 மிலி என்ற அளவில் கலந்து தண்டு துளைப்பானின் அந்துப்பூச்சி வெளிவரும் சமயத்தில் தெளிக்க வேண்டும்.

**நோய் நிர்வாகம்:** ஏலத்தோட்டத்தை அடிக்கடி கண்காணித்து கட்டே நச்சுயிரி நோய் தாக்குதல் உள்ள செடிகள் காணப்பட்டால் அவற்றை உடனுக்குடன் அகற்றி அழித்துவிட வேண்டும். இலைப்புள்ளி, இலைத்துரு மற்றும் செந்தாள் நோய்களைக் கட்டுப்படுத்த 0.25 சத மான்கோசெப் அல்லது கம்பேனியன் (100 லிட்டர் தண்ணீரில் 250 கிராம்) தெளிக்க வேண்டும். 30 நாட்கள் இடைவெளியில் 2-3 தடவை தெளிக்க வேண்டும்.

தட்டை ஒடிதல் காணப்பட்டால் 0.2 சத பெவிஸ்டினை தட்டையின்மேல் தெளிக்க வேண்டும். இலை மஞ்சளாகுதல் மற்றும் வேர் அழுகல் நோயைக் கட்டுப்படுத்த 0.2சத பெவிஸ்டின் அல்லது பெவிஸ்டின் - மான்கோசெப் 1 சத கரைசலை இலையின் மேல் தெளித்தும் மற்றும் செடியின் தூர்ப்பகுதியில் மண் நனையும்படியும் ஊற்ற வேண்டும். ஏலக்காயில் பழுப்பு நிற புள்ளிகள் தென்பட்டால் 0.2 சத பெவிஸ்டினைத் தெளிக்க வேண்டும்.

**மஞ்சள்:**

தாமதமாக நட்ட தோட்டங்களில் தற்சமயம் மஞ்சளை அறுவடை செய்யலாம். முன்னமே அடையாளமிட்ட செடிகளை தனியாக அறுவடை செய்து பின்னர் அவற்றை விதை மஞ்சளுக்காக உபயோகப் படுத்தலாம். மற்ற செடிகளையும் முதிர்ச்சியின் அறிகுறிகளைப் பொறுத்து அறுவடை செய்யலாம். முன்னமே அறுவடை செய்த தோட்டங்களில் குழிகளில் சேமித்துவைத்துள்ள விதைக்கிழங்குகளை 20 நாட்களுக்கு ஒரு முறை கண்காணித்து வதங்கிய மற்றும் நோய் தாக்கிய கிழங்குகளை அகற்றிவிட வேண்டும்.

அறுவடை செய்த மஞ்சள் விரலி மற்றும் கிழங்கு (குண்டு) எனத் தனித்தனியாக பிரித்து பதப்படுத்த வேண்டும். சுத்தமான தண்ணீரில் வேகவைத்து சூரிய ஒளியில் உலர்த்துவதன்மூலம் பதப்படுத்தலாம். சுத்தமான உலர்களம் அல்லது தார்ப்பாய் மீது பரப்பி 10-15 நாட்கள் வரை உலரவைக்க வேண்டும்.

**இஞ்சி:**

குழிகளில் சேமித்து வைத்துள்ள விதைக்கிழங்குகளை 20 நாட்களுக்கு ஒருமுறை கண்காணித்து வதங்கிய மற்றும் நோய் தாக்கிய கிழங்குகளை அகற்றிவிட வேண்டும்.

**வனிலா:**

செடியின் தூர்ப்பாகத்தில் அங்ககப் பொருட்களைக் கொண்டு போதுமான அளவில் மூடாக்கு இடவேண்டும். வளர்ந்துவரும் வெனிலா செடியை தாங்கு மரத்தில் ஏற்றிவிட வேண்டும். பூக்கள் தோன்றும் தோட்டங்களில் பூக்கள் மலர்ந்த அன்றே காலை 6 மணி முதல் மதியம் 1 மணி வரை கை கொண்டு மகரந்தச் சேர்க்கை செய்ய வேண்டும். தோட்டத்தில் நச்சுயிரி நோய் (வைரஸ்) தாக்குதலின் அறிகுறிகள் உள்ளதா என்று கண்காணித்து அவ்வாறு காணப்பட்டால் அந்தக் கொடியை உடனடியாக அகற்றி அழித்துவிட வேண்டும்.

காய்கள் அறுவடையைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். காய்களின் நுனிப்பகுதியில் வெளிறிய மஞ்சள் நிறம் காணப்படுவது காய்கள் முதிர்ச்சி அடைந்ததற்கு அறிகுறியாகும். முதிர்ச்சி அடைந்த காய்களை அறுவடை செய்வதால் பதப்படுத்தும்போது தரத்தை உறுதி செய்ய முடியும். அறுவடை செய்த வெனிலா காய்களை பார்பன் முறையில் பதப்படுத்தலாம். அல்லது அறுவடை செய்தவுடன் விற்பனை செய்யலாம்.

**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்**

## பணம் தரும் பாசிப்பயறு சாகுபடி



தமிழகத்தில் தற்போது மாசிப் பட்டம் துவங்க உள்ளது. மாசிப்பட்டம் என்பதை கோடைப்பட்டம் என்றும் சொல்லலாம். கோடைகாலம் என்று சொல்லும்போது பாசனத்தட்டுப்பாடு ஏற்படுமோ என்ற பயம் ஏற்படும். ஆகையால் விவசாயிகள் பாசிப்பயறு சாகுபடி செய்யலாம். சிலர் பாசிப்பயறை விட்டு உளுந்தை ஏன் சாகுபடி செய்யக்கூடாது என்று கேட்கலாம். தற்போதுள்ள பயிர்களில் பாசிப்பயறுக்குத்தான் வயது குறைவு. மேலும் பாசன நீர் தேவையும் குறைவு.

**பயிர்கள்:**

கரும்பு, வாழை: வயது 300 நாட்கள். தேவையான நீர்: 200-250 செ.மீ. நெல்: வயது 120-130 நாட்கள், தேவையான நீர்: 100-120 செ.மீ. எண்ணெய் வித்துக்கள்: வயது 100-105 நாட்கள், தேவையான நீர்: 60-75 செ.மீ., சிறுதானியம்: வயது 90-110 நாட்கள், தேவையான நீர்: 35-60 செ.மீ., பாசிப்பயறு: வயது 65-90 நாட்கள், தேவையான நீர்: 20-30செ.மீ.

பாசிப்பயறு சாகுபடியில் இதர நன்மைகளும் உள்ளன. மற்ற பயிர்களைவிட ஏக்கருக்கு உரச்செலவு மிகவும் குறைவு. பயிர் பாதுகாப்பிற்கு அதிக செலவு கிடையாது. பாசிப்பயறு சாகுபடி செய்த நிலம் நல்ல வளம் பெறுகின்றது. பாசிப்பயறு ஒரு பணப் பயிராகும். இதன் சாகுபடி நல்ல லாபம் தருகின்றது. இந்த லாபம் 90 நாட்களில் கிடைப்பது குறிப்பிடத்தக்கது.

**சாகுபடி முறை:**

ஒரு ஏக்கருக்கு 10 வண்டி தொழு உரம் இட்டு நிலத்தை நன்கு உழுதுவிட வேண்டும். அடியுரமாக ஏக்கருக்கு 60 கிலோஎடை கொண்ட டை அம்மோனியம் பாஸ்பேட் உரம் இடவேண்டும்.
நிலத்தில் நீர் பாய்ச்சி நல்ல ஈரப்பதத்தில் ஒரு சால் உழவுசெய்து விதை விதைக்க வேண்டும். ஒரு ஏக்கர் விதைப்பிற்கு 8 கிலோ தரமான விதை தேவைப்படும். நீர் பாசனம் செய்வதற்காக நிலத்தில் சிறு சிறு பாத்திகள் (20 அடி, 10 அடி) அமைத்துக்கொள்ளலாம். விதையினை நிலத்தில் விதைப்பதற்கு முன் விதைநேர்த்தி, நுண்ணுயிர் நேர்த்தி செய்ய வேண்டும். இதற்கு அளிக்கும் கவனம் நல்ல பலனைத்தருகிறது.

**விதை நேர்த்தி:**

8 கிலோ விதையுடன் 32 கிராம் திரம் அல்லது டைத்தேன் எம்.45 மருந்து கலந்து 24 மணி நேரம் வைத்திருந்து பின் நுண்ணுயிர் நேர்த்தி செய்ய வேண்டும்.

**நுண்ணுயிர் நேர்த்தி:**

பயறு விதைகளுக்கு நுண்ணுயிரை விதையுடன் நேர்த்தி செய்திட வேளாண்மைத்துறை பரிந்துரைக்கிறது. விதைநேர்த்தி செய்யப்பட்ட விதையை ஒரு பாக்கெட் நுண்ணுயிர் கலவையுடன் கலந்து நேர்த்தி செய்ய வேண்டும். இதற்கு முதலில் நுண்ணுயிர் கலவையை அரிசிக்கஞ்சியில் கலந்து நன்கு பரப்பிய விதையில் கரைசலை தெளிக்க வேண்டும். பின் நிழலில் விதையை 15 நிமிடங்கள் உலரவைத்த பின் விதைக்க வேண்டும்.

**இலைமூலம் உரமிடல்:**

பாசிப்பயறுக்கு டிஏபி உரக்கரைசலை இலைமேல் தெளிக்கும்போது சுமார் 50 கிலோ கூடுதலாக மகசூல் கிடைக்க வாய்ப்புண்டு. கரைசலை கவனமாக தயார் செய்ய வேண்டும். ஏக்கர் ஒன்றுக்கு தேவையான டை அம்மோனியம் பாஸ்பேட் 4.5 கிலோ அளவினை 25 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு நாள் வைத்திருந்து பின் தெளிந்த கரைசலை கவனமாக எடுத்து 210 லிட்டர் தண்ணீரில் கலந்து முதல் தடவையாக பூக்கும் தருணத்திலும் பின் 15 நாட்களில் இரண்டாவது தடவையும்

கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும். விதைத்தெளிப்பானைப் பயன்படுத்தக்கூடாது. மருந்தடிக்கும் போது பூக்கள் கீழே விழுந்துவிடும் அபாயம் உள்ளது.

**களை எடுத்தல்:**

பாசிப்பயறுக்கு களையெடுத்துவிட்டால் நல்ல பயன் கிட்டுகின்றது. ஆனால் என்ன காரணத்தினாலோ பாசிப்பயறுக்கு விவசாயிகள் களையெடுப்பதற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. களையெடுக்கப்பட்ட வயல்களில் காய்கள் கொத்து கொத்தாக செடிகளில் பிடித்திருக்கும். விதைத்த 20ம் நாள் ஒரு முறையும் 30ம் நாள் ஒரு முறையும் களையெடுத்தால் அதிக மகசூல் கிடைக்கும்.

**நீர்ப்பாசனம்:**

கோடையில் பாசிப்பயறுக்கு 6 அல்லது 9 பாசனங்கள் தேவைப்படும். விதைத்த மூன்றாம் நாள் ஒரு முறையும் பிறகு மண்ணின் தன்மைக்கு ஏற்ப 10 முதல் 15 நாட்களுக்கு ஒரு முறையும் பாசனம் கொடுக்கலாம். அதிக அளவில் பாசனம் கொடுத்தால் காய்கள் பிடிப்பது பாதிக்கப்பட்டு விடுகின்றது. அதிக பாசனம் கொடுத்த இடத்தில் இலைகள் அதிகம் வளர்ந்து வெயிலில் செடிகள் துவண்டுவிடுகின்றது. இதனால் பூ பிடிப்பது பாதிக்கப்படுகின்றது. பாசனத்தை கவனித்து செய்து காய்கள் பிடிப்பதை சீராக்க வேண்டும். நாம் சாகுபடி செய்யும் பயிர்களில் குறைந்த வயதினைக் கொண்டது பாசிப்பயறு. பாசிப்பயறு குறைந்த நீர்த்தேவை கொண்டது.

**பயிர் பாதுகாப்பு:**

பயிரினை பூச்சி, வியாதிகள் தாக்காமல் இருக்க விதைத்த 25ம் நாள், 130 மில்லி டைமக்ரான், 500 கிராம் டைத்தேன் எம் 45 இவைகளை நீரில் கலந்து பயிருக்குத் தெளிக்க வேண்டும்.
பயிரில்தேமல் நோய் வராமல் தடுக்க எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நோய் தாக்கிய செடிகளை உடனுக்குடன் பிடுங்கி பிளாஸ்டிக் பையினுள் போட்டு தனியே எடுத்துக்கொண்டு போய் கொளுத்திவிட வேண்டும். நோய் தாக்கிய செடிகளைத் தொட்டுவிட்டு நோய் தாக்காத செடிகளைத் தொடக்கூடாது.

**அறுவடை:**

பாசிப்பயறில் மூன்று முதல் நான்கு அறுவடைகள் கிடைக்கும். விதைத்த 56வது நாளில் முதல் அறுவடையும், 64வது நாளில் இரண்டாவது அறுவடையும், 85வது நாளில் மூன்றாவது அறுவடையும் கிடைக்கும். நல்ல சாகுபடி முறையில் நான்காவது அறுவடை கிட்டும் வாய்ப்பும் உண்டு. விவசாயிகள் 500 கிலோ மகசூல் எடுக்க முடியும். கட்டுக்கோப்பு சாகுபடி முறைகளை கையாண்டால் 600 கிலோ மகசூலாகக் கிடைக்கும்.

**-எஸ்.எஸ்.நாகராஜன்.**

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்


20.02.2013 A.M

## தஞ்சையில் சேத அளவை குறைத்து மதிப்பிட்டுள்ளதாக விவசாயிகள் குற்றச்சாட்டு



தஞ்சை: தஞ்சை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பயிர் அளவைக் குறைத்து மதிப்பிட்டதாக மாவட்ட நிர்வாகத்தின் மீது விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர். தஞ்சை மாவட்டத்தில் நடப்பாண்டில் பருவமழை முற்றிலும் பொய்த்துப் போன நிலையில் குருவை சாகுபடி முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் 12,000 ஏக்கர் நிலம் மட்டும் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் அறிவித்துள்ளார். அவர் மிகவும் குறைவாக மதிப்பிட்டதாக விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். எனவே பாதிக்கப்பட்ட பயிர் செய்த அளவை மீண்டும் கணக்கிட வேண்டும் என்றும் மேலும் ஏக்கருக்கு 25,000 ரூபாய் நிவாரணமாக வழங்க வேண்டும் என்றும் விவசாயிகள் வலியுறுத்தினர்.

## 9 மாவட்டங்களில் இன்றும் மழை பெய்யும்



சென்னை : குமரிக் கடல் பகுதியில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக கடந்த 4 நாட்களாக தென் தமிழகம் உள்ளிட்ட தமிழகம் மற்றும் புதுச்சேரியில் மழை பெய்து வருகிறது. நேற்று அதிகபட்சமாக மணிமுத்தாறு பகுதியில் 220 மிமீ மழை பெய்துள்ளது. உடுமலை பேட்டை 120 மிமீ, தென்காசி, பெரிய நாயக்கன் பாளையம், குளச்சல், பெரியகுளம் 110 மிமீ, கோவை விமான நிலையம் 10 மிமீ, தொண்டி 90 மிமீ, அண்ணூர் 80 மிமீ, பேச்சிப்பாறை, அம்பாசமுத்திரம் 70 மிமீ, மேட்டுப்பாளையம், 60 மிமீ, கேளம்பாக்கம், சூளூர், பொள்ளாச்சி, முதுகுளத்தூர் 50 மிமீ, சத்தியமங்கலம், செங்கல்பட்டு 40 மிமீ மழை பெய்துள்ளது.

இந்நிலையில், குமரிக்கடல் பகுதியில் உருவான குறைந்த காற்றழுத்தம் அதே பகுதியில் நீடிக்கிறது. இதன் காரணமாக திண்டுக்கல், தேனி, மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் இன்றும் இடியுடன் மழை பெய்யும். ஒரு சில இடங்களில் கனமழை பெய்யும்.

தமிழகம், புதுச்சேரியில் பிற இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யும். சென்னையில் பொதுவாக மேகமூட்டம் காணப்படும். சில இடங்களில் விட்டுவிட்டு மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.


## 4.4 கோடி டன் கோதுமை கொள்முதல் செய்ய முடிவு



புதுடெல்லி : ரபி பருவத்தில் 4.4 கோடி டன் கோதுமை கொள்முதல் செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. கடந்த ஆண்டு இந்த பருவத்தில் 3.81 கோடி டன் கொள்முதல் செய்யப்பட்டது. இந்திய உணவு கழகம்(எப்சிஐ) மூலமாக விவசாயிகளிடம் இருந்து நெல், கோதுமை போன்றவற்றை மத்திய அரசு கொள்முதல் செய்கிறது. கடந்த ஏப்ரலில் துவங்கிய ரபி பருவத்திற்கான கோதுமை கொள்முதல் குறித்து மத்திய உணவுத் துறை அதிகாரிகள் நேற்று முன்

தினம் முடிவு செய்தனர். இதன்படி, நடப்பாண்டில் 9.23 கோடி டன் கோதுமை உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்படுவதாகவும், இதில் 4.4 கோடி டன் அளவுக்கு கோதுமை கொள்முதல் செய்யப்படலாம் என்றும் தெரிவித்தனர்.

## உருளைக்கிழங்கு உற்பத்தியில் பீகார் விவசாயி உலக சாதனை



பாட்னா : ஒரு எக்டேரில் 108.8 டன் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்து, பீகார் விவசாயி உலக சாதனை நிகழ்த்தியுள்ளார். நெதர்லாந்து நாட்டில் விவசாயிகள் ஒரு எக்டேர் நிலத்தில் 45 டன் உருளைக்கிழங்கு விளைவித்ததுதான் கடந்த ஆண்டு வரை உலக சாதனையாக இருந்தது. அதை கடந்த ஆண்டில் இந்தியா தோற்கடித்தது. பீகார் மாநிலம், நாலந்தா மாவட்டத்தில் தார்வேஷ்புரா கிராமத்தை சேர்ந்த நிதிஷ்குமார் என்ற விவசாயி, இயற்கை உரங்களை பயன்படுத்தி ஒரு எக்டேர் நிலத்தில் 72.9 டன் உருளைக்கிழங்கு எடுத்தார். அதன் மூலம், முந்தைய உலக சாதனையை முறியடித்தார்.

இந்த ஆண்டில் அந்த சாதனையை அதே பீகார் மாநிலத்தை சேர்ந்த இன்னொரு விவசாயி முறியடித்துள்ளார். அதே நாலந்தா மாவட்டத்தில் சோதிக் கிராமத்தை சேர்ந்த விவசாயி ராகேஷ் குமார்தான் அவர். இது பற்றி, அந்த மாவட்ட கலெக்டர் சஞ்சய்குமார் அகர்வால் நேற்று கூறியதாவது:

ராகேஷ்குமார் இயற்கை உரங்களை பயன்படுத்தி, ஒரு எக்டேரில் 108.8 டன் உருளைக்கிழங்கு விளைவித்திருக்கிறார். இதன் மூலம், உலக சாதனை புரிந்துள்ளார். இதை உறுதிப்படுத்துவதற்காக அவரது நிலத்தில் விவசாய விஞ்ஞானிகள், நிபுணர்கள் மற்றும் அதிகாரிகள் முன்னிலையில் உருளைக்கிழங்கு அறுவடை செய்யப்பட்டது. ஏற்கனவே இதே

மாவட்டத்தில் ஒரு எக்டேரில் 224 குவின்டால் நெல் உற்பத்தி செய்து விவசாயிகள் உலக சாதனை புரிந்துள்ளனர்.இவ்வாறு அகர்வால் தெரிவித்தார்.

## சர்க்கரை மீது கூடுதல் வரி உணவு அமைச்சகம் பரிந்துரை



புதுடெல்லி : சர்க்கரை மீதான உற்பத்தி வரியை கிலோவுக்கு ரூ.1.50 உயர்த்த மத்திய உணவு அமைச்சகம் பரிந்துரைத்துள்ளது. இதற்கு வேளாண்மை அமைச்சர் சரத் பவார் ஆதரவு தெரிவித்துள்ளார். மத்திய அரசின் கட்டுப்பாட்டில் சர்க்கரை உற்பத்தி உள்ளது. அதாவது, லெவி முறையின் கீழ் ஒவ்வொரு சர்க்கரை ஆலையும் தனது உற்பத்தியில் 10 சதவீதத்தை, அரசுக்கு கிலோ விலை ரூ.19.04க்கு அளிக்க வேண்டும். அதேசமயம், ஆலையில் சர்க்கரை விற்பனை விலை தற்போது ரூ.31 ஆக உள்ளது.

லெவி முறையில் பெறப்படும் சர்க்கரையை, மத்திய அரசு, பொது விநியோகத் திட்டத்தில் மக்களுக்கு கிலோ ரூ.13.50க்கு அளிக்கிறது. இதன் மூலம், அரசுக்கு ஆண்டுக்கு ரூ.2,500 கோடி மானியச் சுமை ஏற்படுகிறது. இந்நிலையில், சர்க்கரை மீதான லெவியை முற்றிலும் நீக்குவது பற்றி மத்திய அரசு பரிசீலித்து வருகிறது. அத்துடன் மானியச் சுமையை சமாளிப்பதற்காக சர்க்கரை மீதான உற்பத்தி வரியை(கலால் வரி) உயர்த்துவதற்கு மத்திய உணவு அமைச்சகம் பரிந்துரைத்துள்ளது. தற்போது குவிண்டாலுக்கு வரி ரூ.98 வசூலிக்கப்படுகிறது. இந்த வரியை கிலோவுக்கு ரூ.1.50 உயர்த்த திட்டமிட்டுள்ளது.

இதற்கு வேளாண்மை அமைச்சகம் ஆதரவு தெரிவித்துள்ளது. இது பற்றி, வேளாண்மை துறை அமைச்சர் சரத்பவார் நேற்று கூறுகையில், ‘சர்க்கரை மீதான வரியை உயர்த்தும் உணவு அமைச்சகத்தின் திட்டத்தை நாங்கள் ஆதரிப்போம்‘ என்றார். உற்பத்தி அதிகரிப்பு: கடந்த அக்டோபர் முதல் பிப்ரவரி 15ம் தேதி வரையான காலத்தில் சர்க்கரை உற்பத்தி 2.7% அதிகரித்து

மொத்தம் 1.65 கோடி டன்னாக உள்ளது. இதில் அதிகபட்சமாக மகாராஷ்டிராவில் 57.8 லட்சம் டன், உ.பி.யில் 43.6 லட்சம் டன், தமிழகத்தில் 7.8 லட்சம் டன், ஆந்திராவில் 7.3 லட்சம் டன் என உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

## மரங்களுக்கு மரணம் தரும் கஸ்குட்டா

காரைக்குடி, : காரைக்குடி பகுதியில் ஒட்டுண்ணி தாவரத்தால் அழிந்துவரும் மரங்களை காப்பாற்ற நெடுஞ்சாலை துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காரைக்குடி மகர் நோன்பு திடல், கல்லூ ரி சாலை, கோட்டையூர், ஸ்ரீராம் நகர், புதுவயல், கானாடுகாத்தான், மற்றும் அமராவதி புதூர் முதல் தேவகோட்டை வரை ரோட்டின் இருபுறங்களிலும் வேம்பு, கொன்றை, உதியன் என 500க்கும் மேற்பட்ட மரங்கள் உள்ளன. கல் லூ ரி சாலையில் மட்டும் 100க்கும் மே ற்பட்ட மரங்கள் உள்ளன. இவைகள் நெடுஞ்சாலைத்துறையினரால் பாரமரிக்கப்பட்டு வருகின்றன.

மேலும் அழகப்பா கல்வி வளாகங்களிலும் 100க்கும் மேற்பட்ட மரங்கள் உள்ளன. இங்குள்ள உதிய மரங்களில் ‘கஸ்குட்டா ரிபாலிகா’ என்ற ஒட்டுண்ணி தாவரங்களும், வேப்ப மரங்களில் வேம்பு ஒட்டுண்ணிகளும் படர்ந்துள்ளது. இவைகள் பறவைகள் மூலம் மரங்களின் கிளைகளில் கொடியாக பரவுகிறது.

இத்தாவரங்கள் மரங்களின் மீது வேர் மூலம் படரும். இதற்கு தேவையான நீர், கனிம பொருட்கள் மற்றும் ஊட்டச்சத்துகளை மரத்தில் துளையிட்டு எடுத்துக்கொள்ளும். சத்துகள் உறிஞ்சப்படுவதால் மரங்களில் உள்ள இலைகள் 4,5 ஆண்டுகளில் முழுவதும் உதிர்ந்து விடும். இதனால் ஒளிச்சேர்க்கை நடத்த முடியாமல் மரங்கள் பட்டுப்போய் விடும். இதனால் 100க்கும்

மேற்பட்ட மரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மழையின்மை, ஒட்டுண்ணிகளால் அழிந்துவரும் மரங்களை  நெடுஞ்சாலைத்துறை, சமூகசேவை அமைப்புகள் ஒன்றிணைந்து காப்பாற்ற வேண்டும்.

இதுகுறித்து அறிவியல் ஆசிரியர் ஒருவர் கூறுகையில், 'ஒட்டுண்ணி கள் ஊட்டச்சத்தை உறிஞ்சி விடுவதால் மரங்கள் பட்டு விடுகின் றன. 'கஸ்குட்டா ரிபாலிகா'  ஒட்டு ண்ணியை வெட்டி எடுத்து சிறிய துண்டுகளாக வெட்டி மண்ணுக்குள் புதைக்க வேண்டும். அப்பொழுதுதான் அது மீண்டும் பரவாமல் தடுக்க முடியும்' என்றார்.

## உர விற்பனைக்கு அடையாள எண் பெறாவிட்டால் லைசென்ஸ் ரத்து வேளாண் இணை இயக்குநர் எச்சரிக்கை

சிவகங்கை, : உர விற்பனைக்கு அடையாள எண் பெறாவிட்டால் லைசென்ஸ் ரத்து செய்யப்படும் என சிவகங்கை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் செல்லத்துரை எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை:

அலைபேசி வழி உரக்கண்காணிப்பு மேலாண்மை திட்டத்தின் கீழ் விவசாயத்திற்கு உரம் விற்பனை செய்யும் நிறுவனங்கள், அடையாள எண் பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அடையாள எண் பெற்றவர்களுக்கு மட்டுமே விற்பனைக்கு உரம் சப்ளை செய்யப்படும். சிவகங்கை மாவட்டத்தில் பாக்ட், ஸ்பிக் ஆகிய உர நிறுவனங்கள் அடையாள எண் வழங்கும் பணியை மேற்கொண்டு வருகின்றன. இதுவரை 125 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், 75 தனியார் நிறுவனங்கள் அடையாள எண் வாங்கியுள்ளன.  பிப்.28க்குள் உர விற்பனையாளர்கள் அடையாள எண் பெற வேண்டும். இல்லாவிட்டால் உர லைசன்ஸ் ரத்து செய்யப்படும்.

அடையாள எண் பெறுவதற்கு, உர லைசன்ஸ் நகல், பான்கார்டு நகல், டின் கார்டு நகல், பேங்க் பாஸ்புக் நகல், ஐஎப்எஸ்சி கோடு நம்பர், எம்ஐசிஆர் கோடு நம்பர், செல் நம்பர் ஆகியவற்றுடன் உரத் தரக்கட்டுப்பாடு வேளாண்மை உதவி இயக்குநர் கதிரேசனிடம் தொடர்பு கொள்ள வேண்டும். மொபைல் எண் 9443499101.

மேலும் சிவகங்கை மாவட்டத்திற்கு ஒதுக்கப் படும் உரத்தை பிற மாவட்டங்களில் விற்க கூடாது. அரசு நிர்ணயித்ததை விட அதிக விலைக்கு விற்க கூடாது. விவசாய பயன்பாட்டிற்கு மட்டுமே விற்க வேண்டும். இதுதொடர் பான புகார்கள் வந்தாலும் உர விற்பனை லைசன்ஸ் ரத்து செய்யப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்

## பிப்.22ல் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்

திண்டுக்கல், : திண்டுக்கல்லில் வரும் 22ம் தேதி காலை 10.30மணிக்கு விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற உள்ளது. இதில் கடந்த கூட்டத்தில் கொடுக்கப்பட்ட மனுக்கள் மீது விவாதம் நடைபெறும். அனைத்துத்துறை தலைமை அலுவலர்கள் பங்கேற்க உள்ள இக்கூட்டத்தில் விவசாயிகள் திரளாக கலந்து கொள்ளும்படி மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.

## கண்வலிக்கிழங்கு விவசாயிகளுக்கு மானியம்

திண்டுக்கல், : திண்டுக்கல்லில் கண்வலிக்கிழங்கு சாகுபடி செய்த விவசாயிகளுக்கு மானியத் தொகை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் சந்திரசேகரன் வரவேற்றார்.

கலெக்டர் வெங்கடாச லம் தலைமை வகித்து பேசியதாவது: அந்நிய செலா வணியை ஈட்டித்தரும் முக்கிய பயிராகவும், விவசாயிகளுக்கு அதிகளவில் மகசூலையும் இக்கிழங்கு அளித்து வருகிறது. இதன் விதை ஒரு கிலோ சுமார் ஆயிரம் ரூபாய் வரை சந்தையில் விற்பனை செய்யப்படுகிறது. மேலும் தரமான கண்வலிக்கிழங்கு விதைகள் வெளிநாட்டிற்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. வேடசந்தூர் வட்டாரத்தில் 25ஏக்கர் பரப்பிலும், தொப்பம்பட்டி வட்டாரத்தில் 25ஏக்கர் அளவிலும் பயிரிடப்பட்டு வருகிறது. கண்வலிக்கிழங்கு சாகுபடி செய்த 45விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேர்க்கு ரூ.68ஆயிரத்து 750 என கணக்கீடு செய்யப்பட்டு ரூ.11.83லட்சம் மானியத்தொகை வழங்கப்பட்டுள்ளது, என்றார்.

## மொரப்பூர் பகுதியில் வான்கோழி விற்பனை அதிகரிப்பு

அரூர், : தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் வட்டத்தில் அதிக அளவில் கோழி பண்ணைகள் உள்ளன. இப்பகுதியிலிருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட வியாபாரிகள் வாகனங்களில் கோழிகளை வைத்து கிராமங்களுக்கு நேரடியாக சென்று விற்பனை செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். பண்ணைகளில் வளர்க்கப்படும் நாட்டு கோழி, வான்கோழி, போந்தா கோழி, தின்னி கோழி ஆகிய கோழி குஞ்சுகளை மொத்தமாக கொள்முதல் செய்து அவற்றை வளர்த்து சைக்கிளில் வைத்து ஊர் ஊராக சென்று விற்பனை செய்து வருகின்றனர்.

வான்கோழி, போந்தா கோழி, நாட்டு கோழி ஆகியவற்றை மக்கள் ஆர்வமாக வாங்குகின்றனர். தின்னி கோழி ஒரு ஜோடி ரூ250க்கு விற்பனை செய்யப்படுகிறது. வான்கோழி ரூ350க்கும், நாட்டு கோழி ரூ200க்கும், போந்தா கோழி ரூ100க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

இதுகுறித்து கோழி வியாபாரி மாது கூறுகையில், பென்னாகரம் பகுதியில் ஏராளமானோர் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளோம். தமிழகம் மட்டுமின்றி கேரளா, ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களிலும் விற்பனை செய்கிறோம். விவசாயிகள் கிராம புற மக்கள் இவற்றை வாங்கி 2 மாதம் வளர்த்தாலே ஒரு கோழியை ரூ400 வரை விற்பனை செய்ய முடியும். வருவாய் ரீதியாகவும், உணவுக்காகவும் அதிகம் பயன்படுவதால் மக்களும் ஆர்வமாக வாங்குகின்றனர். தின்னி கோழி வளர்ப்பதன் மூலம் வீட்டின் அருகில் வரும் பூச்சிகள், பாம்பு உள்ளிட்டவற்றை உணவாக எடுத்து கொள்கிறது. எனவே விவசாய நிலங்களில் வசிப்பவர்கள் இந்த கோழியை அதிக அளவில் வாங்குகின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

### விளைச்சல் குறைவு விலை அதிகரிக்கும்

அரூர்: தர்மபுரி மாவட்டத்தில் இந்த ஆண்டுக்கான புளி அறுவடை செய்யும் பணி துவங்கியுள்ளது. மண்டிகளில் சுத்தம் செய்த புளி கிலோ ரூ.50 முதல் விற்பனை செய்யப்படுகிறது. கடந்த கால நிலவரங்களுடன் ஒப்பிடும்போது, இந்த ஆண்டு தர்மபுரி மாவட்டத்தில் புளி விளைச்சல் குறைவாகவே உள்ளது. எனவே விலை உயர வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் கூறுகின்றனர். ஆண்டு சுத்தம் செய்த புளி கிலோ ரூ.40 முதல் விற்பனை செய்யப்பட்டது. இந்த ஆண்டு சீசன் துவங்கும் போதே ரூ.50க்கு விற்பனை செய்யப்படுகிறது.

### துவங்கியது புளி அறுவடை சீசன்

தர்மபுரி, : தர்மபுரி மாவட்டத்தில் புளி அறுவடை சீசன் துவங்கியுள்ளது. இன்று முதல் மதிகோண்பாளையம் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் புளி ஏலம் நடக்க உள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் புளி சாகுபடி அதிகளவில் உள்ளது. தமிழகம் மற்றும் வெளி மாநிலங்களுக்கு இங்கிருந்து புளி அனுப்பப்படுகிறது. இப்பகுதியில் தற்போது புளி அறுவடை சீசன் துவங்கியுள்ளது. இதைதொடர்ந்து தர்மபுரி மாவட்ட ஆட்சியர் லில்லி உத்தரவின் பேரில் இன்று (20ம் தேதி) முதல் வாரம் தோறும் காலை 11 மணிக்கு தர்மபுரி மதிகோண்பாளையத்தில் உள்ள ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் காலை 11 மணிக்கு புளி ஏலம் நடக்க உள்ளது. இதுகுறித்து தர்மபுரி விற்பனை குழுவின் தனி அலுவலர் செல்வம், செயலாளர் முருகேசன் ஆகியோர் கூறும்போது, ஏலத்தில் பெரும்பாலான வியாபாரிகள் கலந்து கொண்டு புளியை ஏலம் எடுக்க ஆதரவை தந்துள்ளனர். எனவே புளி விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்கள் தங்களது புளியை ஏலத்தில் வைத்து அதிக விலைக்கு விற்று பயன்பெற வேண்டும். ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் இலவச சேவையாக தரம் பிரித்தல், சரியான எடை போடுதல், உலர வைப்பதற்கான

களம், குடி தண்ணீர் வசதி மற்றும் கமிஷன் இல்லாத உடனடி முழுப்பணம் பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் புளியின் தரத்திற்கேற்ப உயர்ந்தபட்ச போட்டி விலை கிடைக்கவும் வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே விவசாயிகள் மற்றும் புளி உற்பத்தியாளர்கள் இந்த சேவைகளை பயன்டுத்தி தங்களது புளியை விற்பனை செய்து பயன்பெறலாம் என தெரிவித்துள்ளனர்.

## உழவர் பாதுகாப்பு திட்டத்தில் கூடுதல் நிதிகேட்டு அரசுக்கு கருத்துரு

சிவகாசி, : சிவகாசி தாலுகாவில் உழவர் பாதுகாப்பு திட்டத்தில் பயனாளிகளுக்கு வழங்குவதற்காக அரசிடம் கூடுதல் நிதி கோரப்பட்டுள்ளது.

விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழலாளர்களுக்கு `தமிழக முதல்வரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தல் அடையாள அட்டை வழங்கப்படுகிறது. நேரடியாக விவசாய பணியில் ஈடுபடுவோருக்கு சிவப்புநிற அட்டையும், விவசாயிகளை சார்ந்துள்ள குடும்ப உறுப்பினருக்கு சாம்பல் நிற அட்டையும் வழங்கப்படும். சிவப்புநிற அட்டை பெற 18 முதல் 65 வயதுக்குள்ளும், 2.5 ஏக்கர் நன்செய் அல்லது 5 ஏக்கர் புன்செய் நிலமும் இருக்க வேண்டும.

விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழலில் ஈடுபடுவோரின் குடும்ப உறுப்பினர்களும் இத்திட்டத்தில் சேரலாம்.

சாம்பல்நிற அட்டை பெற வயதுவரம்பு இல்லை. விவசாயிகளை சார்ந்து வாழும் பொருள் ஈட்டாத மனைவி, கணவர், குழந்தைகள், மருமகள் மற்றும் அவரது குழந்தைகள் ஆகியோருக்கு சாம்பல் நிற அட்டைகள் வழங்கப்படும். சிவப்புநிற அடையாள அட்டை பெற்றுள்ள விவசாயிகளின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை வழங்கப்படும்.

தொழற்கல்வி, ஆசிரியர் பயிற்சி போன்ற பட்டயப் படிப்புகள் படிக்கும் விவசாயிகளின குழந்தைகள், கல்லூரியில் தங்கிப்படித்தால் மாதம் ரூ.ஆயிரத்து 50 உதவித்தொகையும், தங்காதோருக்கு ரூ.ஆயிரத்து 750 உதவித்தொகையும் வழங்கப்படுகிறது.

பட்டப்படிப்பு படிக்கும் குழந்தைகள் விடுதியில் தங்கிப்படித்தால் ரூ.ஆயிரத்து 750ம், தங்காதோருக்கு ரூ.2,250 வீதம் உதவித்தொகை வழங்கப்படும். பொறியியல், மருத்துவம், சட்டம் படிக்கும் குழந்தைகள் விடுதியில் தங்கப்படித்தால் ரூ.2 ஆயிரத்து 250ம், தங்காதோருக்கு ரூ.2 ஆயிரத்து 750 வீதம் வழங்கப்படும்.

முதுகலை தொழற்கல்வி படிக்கும் விவசாயிகளின் குழந்தைகள் விடுதியில் தங்கிப்படித்தால் ரூ.4 ஆயிரத்து 250ம், தங்காதோருக்கு ரூ. 4 ஆயிரத்து 750 வீதம் உதவித்தொகை வழஙகப்படும்.

திருமண உதவி திட்டத்தில் ஆணுக்கு ரூ.8 ஆயிரம், பெண்ணுக்கு ரூ.10 ஆயிரம் வழங்கப்படுகிறது.

சாம்பல்நிற அட்டை பெற்றவர்களுக்கு உதவித்தொகை எதுவும் வழங்கப்பட மாட்டாது. சிவகாசி தாலுகாவில் சிவப்புநிற அட்டை 27 ஆயிரத்து 143 பேருக்கும், சாம்பல்நிற அட்டை 22 ஆயிரத்து 104 பேருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

ஏபரல் 2012 முதல் தற்போதுவரை பொதுப்பி£வு உழவர் பாதுகாப்பு அடடை பயனாளிகளுக்கு ரூ.16 லட்சம், தாழத்தப்பட்ட பிரிவு விவசாய பயனாளிகளுக்கு ரூ.6 லட்சம் வரை உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. சிவகாசி தாலுகாவில் அரசு ஒதுக்கீடு செய்த நித முழுவதும் பயனாளிகளுக்கு வழஙகப்பட்டுவட்டது.

இதனால் மார்ச் மாதம் நதியுதவி வழங்க ரூ.5 லட்சம் கூடுதல் நித கேட்டு அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## சிறுதானிய உற்பத்தியை பெருக்க விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி

விருதுநகர், : சிறுதானிய உற்பத்தியை பெருக்க தேர்வு செய்யப்பட்ட 50 விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

விருதுநகர் சூலக்கரையில், `குறுதானிய சாகுபடி மூலம் ஊட்டச்சத்து பாதுகாப்பு அளித்தல் என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடந்தது. இதனை துவக்கி வைத்து கலெக்டர் ஹரிஹரன் பேசியதாவது: குறுதானிய பயிர்களான குதிரைவாலி, வரகு, தினை, சாமை போன்றவை கடும் வறட்சியை தாங்கி வளரக்கூடியவை. அனைத்து மண் வகைகளிலும், மண்வளம் குறைந்த நிலங்களிலும் கூட நன்றாக வளர்ந்து பலன்தரக்கூடியவை. விருதுநகர் மாவட்டத்தில் 1,500 எக்டேரில் குறுதானியங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

இந்த பயிர்கள் பெரும்பாலும் மானவாரியாக சாகுபடி செய்யப்படுகிறது. உரிய முறையில் நிர்வாகம் இல்லாததால் குறைந்த மகசூலையே விவசாயிகள் பெறுகின்றனர். தற்போது குறுதானிய பயிர்கள் குறித்தும், அவற்றின் பலன்கள் குறித்தும் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்பட்டு வருகிறது. இதனால் தேவை அதிகரித்துள்ளது. இதனை கருத்தில்கொண்டு குறுதானிய சாகுபடி பரப்பை அதிகரித்து, உற்பத்தியை பெருக்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக தேர்வு செய்யப்பட்ட 50 விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இந்த தானியங்களை நீண்ட காலத்திற்கு சேமித்து வைத்து பயன்படுத்தலாம். உரிய முறைப்படி 100 வருடங்கள்கூட பாதுகாப்புடன் சேமித்து வைக்கலாம்.

இவ்வாறு கலெக்டர் பேசினார். வேளாண்மை இணை இயக்குநர் சுப்பையா, துணை இயக்குநர் வன்னியராஜன் கலந்துகொண்டனர்.

### ஜெயமங்கலம் பகுதியில் மழைக்கு 100 ஏக்கர் நெல் சேதம்

தேவதானப்பட்டி, : ஜெயமங்கலத்தில் அறுவடைக்கு தயாராக இருந்த 100 ஏக்கர் நெல் வயல்கள் சேதமடைந்தன.

பெரியகுளம் தாலுகா ஜெயமங்கலம் பகுதியில் சுமார் 1000 ஏக்கர் நெல் சாகுபடி வயல்கள் உள்ளன. இந்த வருடம் மழை பொய்த்ததால், கிணற்று பாசனம் உள்ள விவசாயிகள் சுமார் 400 ஏக்கர் பரப்பளவில் நெல் நடவு செய்தனர். நெல் நடவுசெய்த 400 ஏக்கரில், 200 ஏக்கர் நெல் பயிர்கள் தண்ணீர் இல்லாமல் காய்ந்தன. கடந்த இரண்டு நாட்களாக பெய்த மழையால் அறுவடைக்கு தயாராக இருந்த சுமார் 100 ஏக்கர் நெல் பயிர்கள் சேதமடைந்தன.

இதுகுறித்து விவசாயி சக்திவேல் கூறுகையில் இந்த வருடம் மழை இல்லாமல் மிகவும் சிரமப்பட்டு மோட்டார் தண்ணீர் மூலம் ஏக்கருக்கு 20 ஆயிரம் வரை செலவு செய்து நெல் பயிரை காப்பாற்றினோம்.

கடந்த இரண்டு நாட்களாக பெய்த தொடர் மழையால் அறுவடைக்கு தயாராக இருந்த நெல் பயிர்கள் அனைத்தும் சேதமடைந்தன. ஆகையால் சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகள் நெல் வயல்களை நேரடியாக பார்வையிட்டு இழப்பீடு வழங்கவேண்டும்' என்றார்.

### தேனியில் கனமழை வெள்ளமாய் ஓடியது மழைநீர் மானாவாரி விவசாயிகள் மகிழ்ச்சி

தேனி,: தேனியில் நேற்று முன்தினம் இரவு கனமழை பெய்தது.

தேனி மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்யாமல் வறண்ட நிலை இருந்து வந்தது. இதனால், பகல் பொழுதில் கடும் வெய்யில் தாக்கமும், இரவு நேரங்களில் கடும் பனிப்பொழிவும் இருந்து வந்தது. கடந்த ஒரு வாரமாக பனிப்பொழிவு சற்றே குறைந்து வந்தது. பகல் நேரங்களில் கடும் வெயில் தாக்கம் இருந்தது. இதனால், பொதுமக்கள் பெரிதும் அவதிப்பட்டு வந்தனர். மழை இல்லாததால் அணைகளின் நீர்மட்டம் வெகுவாக குறைந்தது. இதனால், தேனி மாவட்டத்தில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டது.

கடந்த 12 ம்தேதி கன்னியாகுமரி கடலில் வளிமண்டல மேல் அடுக்கில் காற்று சுழற்சி உருவானது. இதனையடுத்து, கடந்த 3 நாட்களுக்கு முன் மாவட்டம் முழுவதும் பரவலாக சாரல் மழை பெய்தது. நேற்றுமுன்தினம் இரவு தேனி மாவட்டத்தில் பரவலாக அனைத்து பகுதியிலும் இடியுடன் கூடிய கனமழை பெய்தது. இதனால், சாலைகளில் மழைநீர் வெள்ளம்போல ஓடியது.

தேனி,பெரியகுளம், ஆண்டிபட்டி,போடி, தேவாரம், கடமலைக் குண்டு உள்ளிட்ட பகுதிகளில் மானாவாரி விவசா யம் பெருமளவில் நடக்கிறது. இவ்வாரத்தில் தொடர்ந்து மழை பெய்ததால் மானாவாரி நிலங்கள் நல்ல ஈரப்பதம் அடைந்துள்ளது. இதனால், மானாவாரி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## நுண்ணீர் பாசன பயிர் சாகுபடி விவசாயிகளுக்கு சிறப்பு முகாம் கலெக்டர் அழைப்பு

காஞ்சிபுரம்,: நுண்ணீர் பாசனத்தில் பயிர் சாகுபடிசெய்ய விரும்பும் விவசாயிகளுக்கு கருவி வழங்கும் சிறப்பு முகாம் 7 வட்டங்களில் இன்று நடக்கிறது.

கலெக்டர் சித்திரசேனன் வெளியிட்டுள்ள அறிக்கை:

காஞ்சிபுரத்தில் பயிர் சாகுபடிக்கு போதிய தண்ணீர் இல்லாத நிலையை மேற்கொள்ள ஏதுவாக நுண்ணீர் பாசனத்தை விவசாயிகள் கடைபிடிக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படு கிறார்கள். நுண்ணீர் பாசன கருவிகள் பெற்றிட சிறப்பு முகாம் 7 வட்டங்களில் நடத்தப்படுகிறது. அந்த வகையில், காஞ்சிபுரம், ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தை சேர்ந்த விவசாயிகளுக்கு கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள ஊரக வளர்ச்சி முகமையில் இன்று (20ம்தேதி) காலை 11 மணிக்கு கலெக்டர் தலைமையில் நடக்கிறது.

உத்திரமேரூர் வட்டத்தை சேர்ந்த விவசாயிகளுக்கு தாலுகா அலுவலகத்திலும், மதுராந்தகத்தை சேர்ந்த விவசாயிகளுக்கு வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும், செய்யூரை சேர்ந்த விவசாயிகளுக்கு தாலுகா அலுவலகத்திலும், திருப்போரூரை சேர்ந்த விவசாயிகளுக்கு வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும், திருக்கழுக்குன்றத்தை சேர்ந்த விவசாயிகளுக்கு தாலுகா அலுவல கத்திலும் இன்று காலை 11 மணிக்கு முகாம் நடக்கிறது.

செங்கல்பட்டை சேர்ந்த விவசாயிகளுக்கு வனத்துறை ஆராய்ச்சி நிலைய அலுவலகத்தில் இன்று மாலை 3 மணிக்கு முகாம் நடக்கிறது.

எனவே, முகாமில் கலந்து கொள்ளும் விவசாயிகள் பட்டா, சிட்டா நகல், அடங்கல், நில அளவை வரைபடம்,போட்டோவுடன் கலந்து கொள்ளலாம்.

## மாவட்டம் முழுவதும் கனமழை சூறாவளி: 600 வாழை மரம் சாய்ந்து நாசம்

அநதியூர்,: அநதியூர் அடுதத ஒலகடம, செனனம்பட்டி பகுதியில், இரு நாளாக வசய பலதத சூறாவள காறறுககு, பல லடசம ரூபாய் மதபபலான 600க்கும் மேற்பட்ட வாழை மரங்கள் குலையோடு சாய்ந்து நாசமாயின.

பருவமழை பொய்த்து போனதால் இந்த ஆண்டு ஈரோடு மாவட்டத்தில் வறட்சி நிலவியது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவில் மாவட்டம் முழுவதும் பரவலாக இடி, மின்னல், காற்றுடன் கூடிய பலத்த மழை பெய்தது. சுமார் ஒரு மணி நேரம் கொட்டி தீர்த்த இந்த மழையினால் வெப்பம் தணிந்து சற்று குளிர்ச்சி காணப்பட்டது. மழை நீர் சாலைகளில் பெருக்கெடுத்து ஓடி சாக்கடைகளில் ஏற்பட்ட அடைப்பினால் சாலைகளில் தண்ணீர் தேங்கி நின்றது.

கோபி மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் கடந்த சில நாட்களாக பனி குறைந்து, வெயிலின் தாக்கம் அதிகரித்து இருந்தது. நேற்று முன்தினம் காலை முதலே வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்த நிலையில் இரவு கோபி பேருந்து நிலையம், புதுப்பாளையம், எஸ்.டி.என்.காலனி, மேட்டுவலவு, நாய்க்கன்காடு, நல்லகவுண்டன்பாளையம், கரட்டடிபாளையம், கள்ளிப்பட்டி, கரட்டூர், குன்னத்தூர், அணைப்பதி, மொடச்சூர், அத்தியப்பகவுண்டன்புதூர், உள்ளிட்ட பகுதிகளில் சுமார் ஒரு மணிநேரம் மழை பெய்தது. சாலைகளில் மழை நீர் வெள்ளம் போல் ஓடியது. இதனால் வெப்பம் தணிந்து குளிர்ந்த காற்று வீசியது.

கடந்த சில நாட்களாக வெயிலின் தாக்கத்தால் அவதிப்பட்டு வந்த பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் மழை பெய்துள்ள போதிலும், பவானிசாகர் அணைக்கட்டு மற்றும் நீர்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்யாததால் பாசன விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

நேறறு முனதனம இரவு, அநதயூர, தாளபாளையம, வெளளககரடடூர, பருவாசச, ஒலகடம, செனனமபடடி ஆகய இடஙகளல, பலதத சூறாவள காறறுடன மழை பெயதது. இடி, மனனல, கனமழையுடன சூறாவள காறறு வசயதல, தாளபாளையம, வெளளககரடடூர பகுதயல பயரடடிருநத வாழை மரஙகள முறநது வழுநதன.

ஒரு மாதததல அறுவடைககு தயாராக கதள ரக வாழை மரஙகள குலையோடு முறநது வழுநததல, பல லடசம ரூபாய் மதபபல வவசாயகளுககு நஷடம ஏறபடடது. நேறறு மதயம ஒரு மண நேரம வசய சூறாவளககு, அநதயூர அருகேயுளள செலலமபாளையம ரோடடிலுளள மஞச கடமபை மரம களை முறநது வழுநதது. ஐ.எஸ., காலன பகுதயலுளள டி.டி. ஹெச., ஆணடனாககளும காறறுககு இரையானது.

ராமகவுணடன கொடடாய பகுதயல பயரடபபடடிருநத 300ககும மேறபடட, ஆநதரா ரஸதால, கதள ரக வாழை மரஙகள முறநதன. ஒரு சல இடஙகளல அரை மண நேரததுககும மேலாக கனதத மழை பொழநதது. அநதயூரல நேற்று பெயத தூரல மழையால, நேறறைய வார சநதையல குவநத நுகரவோரகள தககுமுககாடினர. குருவரெடடியூர, இலபபல, வெளளததருபபூர பகுதகளலும,

50ககும அதகமான ஏககர பரபபளவல பயரடபபடடிருநத வாழை மரஙகள வேரோடு சாயநதன. சூறாவளிக் காற்றில் மொத்தமாக சுமார் 600 வாழை மரங்கள் சாய்ந்து விவசாயிகளை கவலையில் ஆழ்த்தி உள்ளது.

பருவாசச பகுதயல வவசாயகள சாகுபடி செயதருநத பபபாள மரஙகள வேரோடு சாயநதன. அமமாபேடடை அருகேயுளள சததார, குபபசசபாளையம ஆகய இடஙகளல இருநத புளய மரஙகள வேரோடு சாயநதன. இதனால, ஒரு மண நேரம போககுவரதது பாதபபு ஏறபடடது. மேலும, கொடடி தரதத கனமழையால, வாயககாலபாளையம, பருவாசச, காநதநகர ஆகய இடஙககளல தாழவான பகுதயலுளள குடிசைகளல தணணர புகுநதது.

ஈரோடு - சென்னிமலை ரோட்டில் சேனார்பாளையத்தில் நேற்று மதியம் மழை, பலத்த காற்று காரணமாக புளியமரம் விழுந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டது. உடனடியாக மாநகராட்சி மற்றும் நெடுஞ்சாலை துறையினர் வராததால் சுமார் 1 மணி நேரத்திற்கு மேல் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. பின்னர் மரத்தை அகற்றியதால் போக்குவரத்து சீரானது.

ஈரோட்டில் பெய்த மழை அளவு விபரம்: சத்தியமங்கலம் 14 மில்லிமீட்டர், கொடிவேரி அணைக்கட்டு 10, கோபி 23, கவுந்தப்பாடி 10, பவானி 72, ஓலப்பாளையம் 15, ஈரோடு 54, மொடக்குறிச்சி 8, அரச்சலூர் 14 மில்லி மீட்டர் மழை பதிவாகி இருந்தது.

## மழையில் நனைந்த நெல்மூட்டைகளை வாங்க கொள்முதல் நிலையம் மறுப்பு

ஸ்ரீமுஷ்ணம், : ஸ்ரீமுஷ்ணம் அருகே வலசக்காடு கிராமத்தில் நெல்கொள்முதல் நிலையம் செயல்படுகிறது. விவசாயிகள் தங்கள் வயல்களில் விளைந்த நெல்மணிகள் மற்றும் பயிர்களை பல்வேறு பகுதிகளிலிருந்து விற்பனை செய்வதற்கு இந்த கொள்முதல் நிலையத்துக்கு கொண்டு வருகின்றனர். ஆனால் விவசாயிகள் கொண்டு வரும் நெல் மூட்டைகளை கொள்முதல் செய்து உரிய தொகையை வழங்குவதில்லை. அரசு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தொகைக்கு ஏற்ப நெல் கொள்முதல் செய்யப்படுகிறது.

இதனால் விவசாயிகள் அங்குள்ள களத்தில் விற்பனைக்கு காத்து கிடக்கும் நிலை உள்ளது. மேலும் தற்போது பெய்த திடீர் மழையால் விவசாயிகள் நெல் மழையில் நனைந்து உள்ளது. இதனை நெல் கொள்முதல் நிலையங்களில் வாங்க மறுத்து விடுவதால் விவசாயிகள் மழையில் நனைந்த நெல் மணிகளை மீண்டும் உலர வைத்து பின்பு விற்க வேண்டியுள்ளது.இதனால் ஆட்கூலி மற்றும் இதர செலவுகள் ஏற்படுவதுடன் பெரும் சிரமத்துக்கு ஆளாகி வேண்டியுள்ளது. எனவே பல்வேறு நெல் கொள்முதல் நிலையங்களை இதுபோன்று நிலையில் தான் உள்ளது.

எனவே அரசு நெல் கொள்முதல் செய்ய நிர்ணயிக்கப்பட்ட தொகையை அதிகரித்து விவசாயிகள் கொண்டு வரும் நெல் அனைத்தையும் கொள்முதல் செய்வதற்கு முன் வரவேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**20.02.2013 A.M**

---

## திருச்சி மாவட்டத்தில் டெல்டா விவசாயிகளுக்கு நிவாரணத்தொகை வழங்க முதல்–அமைச்சர் ஆணை மாவட்ட கலெக்டர் தகவல்

திருச்சி

திருச்சி மாவட்டத்திலுள்ள டெல்டா விவசாயிகளுக்கு நிவாரணத்தொகை வழங்க கோரி முதல் அமைச்சர் ஆணையிட்டுள்ளதாக திருச்சி மாவட்ட கலெக்டர் ஜெயஸ்ரீமுரளிதரன் தகவல் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:–

உயர்மட்டக்குழு

சம்பா பயிர் சாகுபடி செய்து பாதிக்கப்பட்ட டெல்டா விவசாயிகளுக்கு நிவாரணத்தொகை வழங்குவதற்கான ஆலோசனை கூட்டம் மாவட்ட கலெக்டர் தலைமையில் நடந்தது. கூட்டத்தில் காவிரி பாசன பகுதியை சேர்ந்த டெல்டா மாவட்டங்களில் பருவமழை குறைந்த அளவே பெய்ததாலும் காவிரியில் உரிய அளவு தண்ணீர் கிடைக்காததாலும் சம்பா சாகுபடி பாதிப்புக்கு உள்ளானது. இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்கிட ஏதுவாக பயிர் சேதங்களை பார்வையிட்டு அறிக்கை அளித்திட உயர்மட்ட குழு அமைக்கப்பட்டது.

நிவாரணத்தொகை

குழுவில் நிதி அமைச்சர் தலைமையில் அமைச்சர்கள், அரசு செயலாளர்கள் அடங்கிய உயர்மட்டக்குழுவினர் கடந்த மாதம் நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், அரியலூர்,திருச்சி

ஆகிய மாவட்டங்களில் சுற்றுப்பணயம் செய்து பாதிக்கப்பட்ட சம்பா சாகுபடி பகுதியை பார்வையிட்டு முதல் அமைச்சரிடம் அறிக்கை அளித்தனர். அதன் அடிப்படையில் ஆய்வு செய்த திருச்சி மாவட்டத்தில் 22 ஆயிரத்து 443 ஏக்கர் நிலப்பரப்பில் சம்பா சாகுபடி செய்த டெல்டா விவசாயிகளுக்கு நிவாரண தொகை வழங்கப்பட உள்ளன.

வங்கிகள் மூலம் வழங்க..

இந்த நிவாரணத்தொகை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் இதர வங்கிகள் மூலமாக பாதிக்கப்பட்ட டெல்டா விவசாயிகளுக்கு இந்த மாதம் இறுதிக்குள் வழங்கப்படும். இந்த பணியில் வருவாய்துறை, வேளாண்மைதுறை, கூட்டுறவுதுறை, வங்கியாளர்கள், ஆகிய துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து செயல்பட உள்ளனர். பணியை கண்காணிக்க துணை கலெக்டர் தலைமையில் ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு மண்டல அலுவலர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதில் ஒவ்வொரு நாளும் நிவாரண உதவித்தொகை வழங்குவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் முன்னேற்றம் குறித்து மாவட்ட கலெக்டருக்கு அறிக்கை சமர்பிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

கலந்து கொண்டவர்கள்

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் தியாகராஜன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ராதா, இணை இயக்குநர் சேகர், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் டாக்டர் ராஜேந்திரபிரசாத் முன்னோடி வங்கி மேலாளர் ராமதாஸ் நேர்முக உதவியாளர் பொன்னியின் செல்வன் வருவாய் கோட்டாட்சியர்கள் சக்திவேல், முஸ்தபா கமால் பாட்ஷா (முசிறி), பார்த்திபன்(லால்குடி) உள்ளிட்ட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## மதுரை மாவட்டத்தில் பரவலாக மழை

மதுரை

மதுரை மாவட்டத்தில் பரவலாக மழைபெய்தது.

150 மில்லி மீட்டர்

தமிழ்நாட்டில் பருவமழை பொய்த்தது. மதுரை மாவட்டத்திலும் மழைபெய்யாததால் கண்மாய், குளங்கள் வறண்டு விட்டன. மதுரை மாநகருக்கு குடிநீர் வழங்கும் வைகை அணையிலும் நீர்மட்டம் குறைந்துள்ளது. வெயிலின் தாக்கமும் கடந்த சில நாட்களாக அதிகரித்தது.

இந்த நிலையில் அரபிக்கடலில் நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக கடந்த 2 நாட்களாக பரவலாக மழைபெய்து வருகிறது. மதுரை தேனி, திண்டுக்கல் மாவட்டங்களிலும் மழைபெய்துள்ளது. மதுரை மாவட்டத்தில் அதிகபட்சமாக பேரையூரில் கடந்த 3 நாட்களில் 150 மில்லி மீட்டர் மழைபெய்து இருக்கிறது.

<u>நீர்மட்டம்</u>

காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் பதிவான மழைஅளவு மில்லி மீட்டரில் வருமாறு:–

விரபாண்டி–82, மருதாநதி–55, மஞ்சளாறு–48, பெரியாறு அணை–28, சோத்துப்பாறை–26, உத்தமபாளையம், தணியாமங்கலம்–15, இடையபட்டி–10.4, ஆண்டிபட்டி–10, கொடைக்கானல்–8.4.

மழைகாரணமாக பெரியாறு அணைக்கு கடந்த சில நாட்களாக தண்ணீர்வரத்து உள்ளது. வைகைஅணைக்கு பல மாதங்களுக்கு பிறகு நேற்று சற்று தண்ணீர்வரத்து இரந்தது. வினாடிக்கு 86 கனஅடிதண்ணீர் வந்தது. பெரியாறு அணையின் நீர்மட்டம் 112.80அடி. அணைக்கு வினாடிக்கு 290 கனஅடிதண்ணீர் வரத்து இருந்தது. அணையில் இருந்து 105 கனஅடிதண்ணீர் திறக்கப்பட்டது. வைகைஅணை நீர்மட்டம் 48.24 அடியாகும். அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக 60 கனஅடி தண்ணீரும் திறந்து விடப்பட்டது.

<u>மழை</u>

மதுரைநகரிலும், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் கடந்த 2 நாட்களாக பரவலாக லேசான மழைபெய்துள்ளது.

காலையில் மதுரைநகரில் விட்டு விட்டு மழைபெய்தது. தொடர்ந்து பகல்முழுக்க வெயில் இன்றி வானம் மேகமூட்டத்துடனேயே காணப்பட்டது. வெப்பம் தணிந்து குளிர்ந்த இதமான காற்றுவீசியது.

**தென்மாவட்டங்களில் நாளை அநேக இடங்களில் மழை பெய்யும் வானிலை மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் பேட்டி**

சென்னை

அரபிக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை நீடிப்பதன் காரணமாக தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களில் நாளை அநேக இடங்களில் மழை பெய்யும் என்று வானிலை மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

<u>குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை</u>

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை பொய்த்தது. அதனால் விவசாயம் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. அரபிக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக கடந்த 5 நாட்களாக தமிழ்நாட்டில் தென்மாவட்டங்களிலும் டெல்டா மாவட்டங்களிலும் அநேக இடங்களிலும் மற்ற மாவட்டங்களில் சில இடங்களில் மழை பெய்து வருகிறது.அரபிக்கடலில் உள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை அதே இடத்தில் நீடிப்பதால் மேலும் மழை நீடிக்கும் என்று சென்னை வானிலை ஆராய்ச்சி மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது:–

அரபிக்கடலில் லட்சத்தீவு அருகே உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை அதே இடத்தில் நீடிக்கிறது. அதன் காரணமாக தமிழ்நாட்டில் பெரும்பாலான இடங்களில் மழை பெய்துள்ளது. நெல்லை மாவட்டம் மணிமுத்தாறில் அதிகபட்சமாக 22 செ.மீ. மழை பெய்துள்ளது.இன்று தென்மாவட்டங்களில் அநேக இடங்களில் மழை பெய்யும். வட மாவட்டங்களில் சில இடங்களில் மழை பெய்யும்.சென்னையில் சில நேரங்களில் சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

இன்று காலை 8–30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேர மழை அளவு வருமாறு:–

<u>22 செ.மீ. மழை</u>

மணிமுத்தாறு 22 செ.மீ., உடுமலைப்பேட்டை 12 செ.மீ., தென்காசி, பெரியநாயக்கன்பாளையம், கொளச்சல், பெரியகுளம் தலா 11 செ.மீ., கோவை விமான நிலையம், தொண்டி தலா 10 செ.மீ., பேச்சிப்பாறை, அம்பாசமுத்திரம் தலா 7 செ.மீ., மேட்டுப்பாளையம், கோவை தெற்குபகுதி, கோபிச்செட்டிப்பாளையம், ஆர்.எஸ்.மங்கலம், இரணியல் தலா 6 செ.மீ., கேளம்பாக்கம், சூளூர், பொள்ளாச்சி, முதுகுளத்தூர் தலா 5 செ.மீ., திருப்பூர், அவினாசி, பாலக்கோடு தலா 4 செ.மீ.,சேரன்மகாதேவி, குன்னூர்இ சத்தியமங்கலம், செங்கல்பட்டு, மேலூர், பெரியார் அணை, ஆயிக்குடி, சிவகிரி தலா 3 செ.மீ., அரண்மனைப்புதூர், ஆண்டிப்பட்டி, கொடைக்கானல், திண்டுக்கல், காமாட்சிபுரம், அரவாக்குறிச்சி, தேவக்கோட்டை, தாம்பரம், மதுராந்தகம்,

ராமநாதபுரம், திருவள்ளூர், இலுப்பூர் தலா 2 செ.மீ. மழை பெய்துள்ளது. மேலும் பல இடங்களில் தலா 1 செ.மீ. மழை பதிவாகி இருக்கிறது.